



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 225சோபகிருது வருடம், சித்திரை மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை
(04.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 13, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







# ஆட்சிக்கு எதிராக கூட்டு எதிர்ப்பு!

## ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கண்டித்து அணிதிரள சஜித் அழைப்பு

•நமது நிருபர்

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக எதிரணியினர் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறையும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டுமென அழைப்புவிடுத்தார். தற்போதைய அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்கு காரணமான அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தன்னிச்சையான வேலைத்திட்டத்துக்கு எதிராக அணிதிரள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களின் பங்கேற்புடன், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஊடகப் பிரதானிகள் மற்றும் பத்திரிகை பிரதம ஆசிரியர்களுடனான கலந்துரையாடலொன்று கொழும்பு மெண்டரின் ஹோட்டலில் நேற்று (03) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துவெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். 02 பக்கம்




சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் யாழ். ஊடக அமையத்துக்கு முன்பாக ஊடகவியலாளர்களால் நேற்று (03) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: யாழ்.செய்தியாளர்)

# மின்னலின்போது அவதானம் தேவை

## யாழ். அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் எச்சரிக்கை



•யாழ். செய்தியாளர்

மின்னல் ஏற்படும்போது பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார். 02 பக்கம்

# மின்கட்டண திருத்தம் ஜூலையில் அமுல்

•நா.தினுஷா



அரசாங்கத்தினால் கடந்த வருடம் டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் மற்றும் அமைச்சரவை முடிவுகளின் அடிப்படையில் எதிர்வரும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை மதிப்பாய்வு செய்து திருத்தியமைக்க தீர்மானித்துள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம், ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டண பொறிமுறையை மதிப்பாய்வு செய்யவும் திருத்தியமைக்கவும் எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மின்சாரத்துறையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வேலைத்திட்டங்களுக்கான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான மின் கட்டணங்களுக்கு புதிய சூத்திரத்தை தயாரிப்பதற்காக மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டிருந்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் (02) அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, 02 பக்கம்

# முதலீட்டாளர்களின் வசதிக்காக ஏழு செயலணிகள் உருவாக்கம்

PMD
ජනාධිපති මාධ්‍ය අංශය
ஜனாதிபதி ஊடகப் பிரிவு
PRESIDENT'S MEDIA DIVISION

நாட்டில் வர்த்தக நட்பு சூழலை உருவாக்கும் நோக்குடன், ஏழு செயலணிகளின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வசதியான சேவைகளை வழங்கும் வகையில் 54 நிறுவனங்களை நிறுவ ஜனாதிபதி அலுவலகம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று (03) அறிக்கையொன்றை வெளியிட்டது.

முதலீடுகளின் செயல்திறனை அதிகரிக்கவும் அதற்கு செலவிடப்படும் நேரத்தைக் குறைக்கவும் தேவையான... 02 பக்கம்

# அறிக்கைகளால் இனப்பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வு கிடைக்காது

## இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதிக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆலோசனை



தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படாமல், தீர்க்கப்படும் என்று அறிக்கை விடுவதால் மட்டும் நாட்டின் நெருக்கடி தீர்ந்துவிடாது என்றும் இன்றைய ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படுகிறார் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதத்தில் அவரது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும்... 02 பக்கம்



# இயக்குநர் மனோபாலா காலமானார்

10 பக்கம்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தரிசு நிலங்கள் பகிர்ந்தளிப்பு

## வடிவேல் சுரேஷின் கோரிக்கைக்கு ஜனாதிபதி ரணில் சாதகமான பதில்



•நமது நிருபர்

மலையகத்தில் காடாகிப் போயுள்ள காணிகளை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு விவசாயத்துக்காக பகிர்ந்தளிக்கும் யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்ததாகவும் அதற்கான சாதக நிலைமை குறித்து ஆராய்வதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும்... 02 பக்கம்



# லிட்ரோ எரிவாயுவின் விலை குறைப்பு

லிட்ரோ எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், 12.5 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 3,638 ரூபாவாகும். மேலும், 5 கிலோ எரிவாயுவின் விலை 40 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 1,462 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2.3 கிலோகிராம் எரிவாயுவின் விலை 19 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 681 ரூபாவாகும். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

போன கிழமையெல்லாம் வெயில் காரணமா வெளியில இறங்கேலாம இருந்தது.. இந்த கிழமை மழை காரணமா வெளியில இறங்க முடியாமல் இருக்குது... இயற்கையும் நல்லாத்தான் விளையாடுது..!



# கடன் மறுசீரமைப்பில் இறுதி முடிவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

•நா.தினுஷா



தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இதுவரையில் எவ்வித சாதகமான இறுதி முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்றும் தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இன்னும் பேச்சுவார்த்தை மட்டத்தில் இருப்பதாகவும் அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்... 02 பக்கம்

# நிதி நெருக்கடி காரணமாக மகநெகுமவின் நான்கு நிறுவனங்கள் மூடல்

•நா.தினுஷா

நிதி தட்டுப்பாட்டின் காரணமாக மகநெகும உள்ளிட்ட அதன் கீழ் இயங்கும் நான்கு நிறுவனங்களை, கடந்த மாத இறுதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (03) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,... 02 பக்கம்

## உஷ்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நியமனங்களை அகற்றுகிறாராம் இப்போதைய அமைச்சர்.

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவால் நியமிக்கப்பட்ட பலர் இதன் முதற்கட்டமாக அகற்றப்பட்டுள்ளனராம்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்வோரும் இந்தப் பட்டியலில் இருப்பதாக தகவல்.

# பொதுமக்களின் காணிக்குள் விகாரை தையிட்டியில் கவனயீர்ப்பு போராட்டம்




பொதுமக்கள் காணிக்குள் அத்துமீறி கட்டப்பட்ட விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி யாழ். வலிவடக்கு தையிட்டியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை வீதி, தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் நேற்று பிற்பகல் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பேரணியாக நகர்ந்து தையிட்டி விகாரை வரை சென்றது.

## மின்கட்டண திருத்தம்...

சராசரி எடையுள்ள பிரதான கடன் வீதம், திறைசேரி கட்டண வீதம், பரிமாற்ற வீதம் மற்றும் பணவீக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த சூத்திரம் திருத்தியமைக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு 3 சதவீத உயர்தர முதலீடுகள் வழங்கப்படும்.

தெரிவுகளுக்கு ஏற்ப வேறுபட்ட கட்டண சூத்திரங்கள் அல்லது நிலையான கட்டண சூத்திரத்தை கடந்த வருடம் அறிமுகப்படுத்தியிருந்தோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (03) தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்புகள் குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பை நடத்தினேன். சமுர்த்தித் திட்டத்துக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்வாங்கப்பட வேண்டுமென நான் அவரிடம் வலியுறுத்தினேன். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக குறைவான வருமானம் பெறும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கிறார்கள். பொருளாதார சுமையை எதிர்கொள்ளும் சக்தியற்றவர்களாக அவர்கள் காணப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் நாளாந்தச் சம்பளம் போதுமானதாக இல்லை. பெருந்தோட்ட நிறுவனங்களால் முறையான வகையில் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து பல்வேறு முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தினேன். மேலும், மலையகப் பகுதிகளில் காடாகிப் போயுள்ள காணிகளை விவசாயத்துக்காக பெருந் தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அவரிடம் முன்வைத்தேன். இந்த விடயங்கள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, தனது வெளிநாட்டுப் பயணம் நிறைவடைந்த பின்னர் உரிய அதிகாரிகளை நேரில் அழைத்து சாதகமான நிலைமை குறித்து ஆராய்ந்து தீர்வு வழங்குவதாக உறுதியளித்தார் என்றார். இதேவேளை, அரசாங்கத்தில் இணையும் நோக்கிலா ஜனாதிபதியை சந்தித்தீர்கள் என 'தமிழன்' ஆசிரிய பீடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வடிவேல் சுரேஷ் எம்.பி., அவ்வாறான எண்ணத்துடன் அவரை சந்திக்கவில்லை என்றார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொள்ளாமை குறித்து சஜித்திடம் பேசியதாகவும் அவர் பசறைக்கு விரைவில் வருகைதந்து மன்னிப்புக் கேட்பதாகக் கூறியதாகவும் வடிவேல் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

## லிட்ரோ எரிவாயுவின்...

இதேவேளை, சமையல் எரிவாயுவின் விலையைக் குறைக்கப் போவதில்லையென லாஃப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

லாஃப் எரிவாயு நிறுவனம், சமையல் எரிவாயுவின் விலைக் குறைப்பை மேற்கொள்ளுமா என கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அந்நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நிதி நெருக்கடி காரணமாக...

மகநெகும உள்ளிட்ட நான்கு நிறுவனங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிதி எங்களிடம் இல்லை. அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வதில் பயனும் இல்லை. அதற்கு நிதியும் இல்லை.

அரச தொழில் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். மகநெகும உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய நான்கு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

மேலும் சில நிறுவனங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் சம்பவங்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடமும் செயலாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான நிறுவனங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்படவில்லை.

## கடன் மறுசீரமைப்பில்...

சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தையில் இதுவரையில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் ஒவ்வொரு தரப்பினரும் பல்வேறு விம்பங்களை உருவாக்கி வருகிறார்கள்.

நிலையான வைப்பிலிருக்கும் நிதிக்கு சீல்வைக்கப்படும். அந்த நிதியை எடுக்கப்போகிறார்கள், ஊழியர் சேமலாப நிதி சூரையாடப்படும் என்று பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச செயற்பாடுகள் இன்னும் முடிவடையவில்லை. அதற்கான விசேட நிறுவனங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றன.

அதேபோன்று தேசிய கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும்போது நாட்டிலுள்ள வைப்பாளர்கள், ஊழியர் சேமலாப நிதி கணக்கு உரிமையாளர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் வழிமுறைகளை உருவாக்குவதற்கான பொறுப்பு அந்த குழுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் 16 முறைகள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். அதன்போது, ஒருபோதும் அதனை பாராளுமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அது தொடர்பில் விளக்கமளிக்கவும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இம்முறை நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான வாக்கெடுப்பையும் நடத்தியிருந்தோம். ஆகவே, இதில் மூடி மறைப் பதற்கு எதுவும் இல்லை. எனவே யாருக்கும் நட்டம் ஏற்படாத வகையிலேயே இந்த கடன் மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன என்றார்.

## மின்னலின்போது அவதானம்...

நாட்டின் தற்போதுள்ள காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை காரணமாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 79 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் குறிப்பாக சாவகச்சேரி, மருதங்கேணி ஊர்காவற்றுறை, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும்பாலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் மருதங்கணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பகுதியில் ஒரு பாடசாலையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்தோடு ஊர்காவற்றுறை பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் காரணமாக ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடுகளில் காணப்பட்ட மின் உபகரணங்கள் பாதிப்படைந்துள்ளன. அத்தோடு கோப்பாய் பிரதேசத்தில் மழையின் காரணமாக ஏற்பட்ட மின்னொழுக்கினால் ஒரு வீட்டில் இருந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த காலநிலை மேலும் ஒருவாரம் தொடருமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பாக மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும். குறிப்பாக மின்னல் தாக்கங்கள் ஏற்படும் நேரங்களில் மின் உபகரணங்கள் தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்துவது மிகவும் சால சிறந்தது என்றார்.

# ஊழியர் நம்பிக்கை, சேமலாப நிதியத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள்

## தேசிய கடனை ஈடுசெய்வது தொடர்பில் தயாசிறி எம்.பி. தகவல்

(கே. சுபானி)



நாட்டின் மொத்த தேசிய கடனை ஈடுசெய்வதற்காக அரசு கொண்டுவந்துள்ள வேலைத்திட்டம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப்பெறும் கடனுதவித் திட்டத்துடன் தற்போது நாட்டின் மொத்த தேசிய கடனை ஈடுசெய்வதற்காக வேலைத்திட்டமொன்றை அரசு முன்னெடுத்துள்ளது.

நாட்டின் மொத்த தேசிய கடன் ரூபா 12.35 ரில்லியனாக உள்ளது. இதில் 3.78 ரில்லியன் ரூபா செலுத்தவேண்டியுள்ளது. 8.56 ரில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிகள் உள்ளன.

இந்நிலையில் நாட்டின் மொத்த தேசிய கடனை ஈடுசெய்வதற்கான வேலைத்திட்டத்தில் 12.35 ரில்லியன் ரூபா கடனில் ஒருதொகையை அரசு ஈடுசெய்ய முயற்சிக்குமானால் அதில் முதலில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழில் நம்பிக்கை நிகதியதுக்குமே பாதிப்பை ஏற்படுத்தும்.

அதனை அரசால் நிறுத்த முடியாது. சேமிப்புகளுக்கும் பரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்நாட்டின் ஓய்வூதியத்தை எதிர்நோக்கியுள்ள அப்பாவி பொதுமக்களின் சேமிப்புகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அறிவித்து 11 நாட்களுக்குள் தொடர்ச்சியாக நாட்டின் பங்கு சந்தை பாரிய வீழ்ச்சியை காணும்.

பங்குச் சந்தை வீழ்ச்சி கண்டால் அதனை மூடிவிடுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவர் அதனை மூடிவிடுவதற்கு எதிர்ப்பார்த்துள்ளாரா என்று எனக்குத் தெரியாது. வங்கிகள் இயங்காவிடின் அவற்றையும் மூடிவிடுவதாக அவர் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் இவை நடைபெறலாம் என்றார்.

## அறிக்கைகளால்...

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று மேதின பொதுக்கூட்டத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இதற்கு பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

மேதினத்தன்று ஜனாதிபதி ஆற்றிய உரையின் ஒருபகுதியாக இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றும் இந்த வருடம் முடிவுக்குள் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்றும் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்பாக கடந்த வருட இறுதியில் பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியபொழுது, பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சம்மதமா என ஏனைய கட்சிகளிடம் கேட்டபொழுது முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தாங்கள் அதனை ஆதரிப்பதாகக் கூறினார்.

அதேபோல் எதிர்த்தரப்பில் இருந்த சஜித் பிரேமதாசவும் அதனை ஆதரிப்பதாகத் தனது கருத்தை வெளியிட்டார். ஒருசில சிங்கள இனவாதிகளைத் தவிர, பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துகள் இருக்கவில்லை.

அதுமாத்திரமல்லாமல், 1988ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பதின்மூன்றாவது திருத்தம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது. ஆகவே அதனை நடைமுறைப்படுத்துவதில் இப்பொழுதைய ஜனாதிபதிக்கு எந்தவிதமான தடங்கல்களும் இருக்கப்போவதில்லை.

மேலும், கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியபோதிலும் எதுவும் நடைபெறவில்லை. அதுமாத்திரமல்லாமல், சகல தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளையும் அழைத்து ஜனாதிபதி மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுமிருந்தார்.

அதில் தமிழ் தரப்பில் முக்கியமான கோரிக்கையாக இப்பொழுது நடைபெற்றுவரும் காணி அபகரிப்பு அல்லது காணிகளை கபளீகரம் செய்தல், இந்துக்கோயில்களை உடைத்து பௌத்த விகாரைகளைக் கட்டுதல், வடக்கு-கிழக்கில் குடிசனப் பரம்பலை மாற்றும் வகையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளல் போன்ற சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு கோரியிருந்தும்கூட, இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

இந்த இலட்சணத்தில், அரசியல் சாசனத்தில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ஒரு ஜனாதிபதி, புதிய அரசியல் சாசனம் பற்றியும் இந்த வருடத்துக்குள் இனப்பிரச்சினை தீரும் என்று கூறுவது தமிழ் மக்களை மாத்திரமல்ல முழுஉலகத்தையுமே ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதன் பின்னர், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பல்வேறு ஜனாதிபதிகளாலும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பிரேமதாச,மங்களமுனசிங்க தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமித்தார். அந்த அறிக்கை நடைமுறைப்படுத்தப்படாமல் தூக்கிவீசப்பட்டது. அதற்குப் பின்னர் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க ஒரு தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவந்தார். பின்னர் அதுவும் கைவிடப்பட்டது.

அவரைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் பேராசிரியர் திஸ்ஸவிதாரன தலைமையில் சர்வகட்சி குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த அறிக்கையும் கண்டுகொள்ளாமலே விடப்பட்டது. பின்னர், ரணில் மைத்திரி ஆட்சியில் புதிய அரசியல் சாசனத்துக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அது பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. அதன் நிலை என்ன என்பது பற்றி யாருக்கும் தெரியாது. இலங்கையை ஆட்சிசெய்துவரும் அனைத்து அரசாங்கங்களும் இனப்பிரச்சினைத் தீர்வைக் காலம் கடத்துவதை நோக்கமாகக் கொண்டே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதுடன் ஆணைக்குழுக்களையும் நியமிக்கின்றார்களே தவிர, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இதயசுத்தியுடனான எண்ணம் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

சென்றவாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ்க் கட்சிகள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் நெருக்கடிகள் பற்றிப் பேசியதுடன், முதற்கட்டமாக பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அதற்கு இந்தியா முழுமையான உதவி ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தன. அதனை ஏற்றுக்கொண்டு, பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்ற இந்தியா உதவிக்கரமாக இருக்கும் என்று இந்திய உயர்ஸ்தானிகரும் தனது அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார். இந்த நிலையில்தான் இலங்கையின் ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகவும் இந்த வருட இறுதிக்குள் தீர்வு காணப்படும் என்றும் கூறியிருக்கின்றார். இன்றைய காலகட்டத்தில் புதிய அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான உடனடி ஏதுநிலைகள் இல்லை. எனவே முதற்கட்டமாக தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறும்பொருட்டு, அரசியல் சாசனத்தில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து ஏற்கனவே அனைத்து ஜனாதிபதிகளும் ஏற்றுக்கொண்டதைப் போன்று, இது முழுமையான தீர்வு இல்லை என்ற அடிப்படையில், இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வைக்காண இன்றைய ஜனாபதி இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்களின் வசதிக்காக...

தகவல்களை எளிதாகப் பெறுவதற்கான வாய்ப்பையும் இது எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, செயலணிகளுக்கு முறையான பொறுப்புகள் வழங்கப்படுவதோடு அதற்கான நிலையான முறைமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வர்த்தகப் பிரவேசத்தை இலகுபடுத்துவதற்காக கம்பனி பதிவாளர் அலுவலக சட்ட கட்டமைப்புகள் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதற்காக வர்த்தக பதிவுக்கான செயலணி உள்ளடக்கப்படும்.

இந்த செயலணியின் ஊடாக டிஜிட்டல் கையொப்ப கட்டமைப்பை உருவாக்குதல், கம்பனி சட்டத்துக்கு இறுதிப் பயனாளிகளின் உரிமையை இணைத்தல் மற்றும் கம்பனி பதிவாளரினால் பயன்படுத்தப்படும் படிவங்களை எளிமைப்படுத்தல் உள்ளிட்ட முக்கிய சேவைகளை வழங்கும்.

காணிப் பதிவு, தேவையான சான்றிதழ்கள் மற்றும் தொடர்புடைய கொடுப்பனவுகள் பற்றிய நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சொத்துப் பதிவு குறித்த செயலணியொன்றும் அமைக்கப்படவுள்ளது. நில அளவைத் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, மேல் மாகாண வருவாய் திணைக்களம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் உட்பட ஏழு நிறுவனங்களை இந்த செயலணியில் உள்ளடக்கும்.

காணி உறுதி விபரங்களை தேடல், இலத்திரனியல் உறுதிப் பதிவு மற்றும் கட்டிடம், வீதி எல்லைச் சான்றிதழைப் பெறுவதற்கான நேரம், செலவு மற்றும் நடைமுறைகளைக் குறைக்க ஈ-காணி முறைமை இந்த செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

இந்த செயலணி முதன்மையாக கொழும்புப் பகுதியில் அந்தச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்துவதோடு, காணிப் பதிவேட்டு தரவுகளைப் பெற ஒன்லைன் வசதி அளித்தல், முத்திரைக் கட்டணத்தைக் கணக்கிடுவதற்கும் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கும் ஒன்லைன் வசதிகளை வழங்குதல், காணி ஆவணத்தில் உள்ள திட்ட விபரங்களை இணையத்தளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேல் மாகாணத்துடன் தொடர்புடைய காணிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இணைய சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் காணி உரித்து தொடர்பான தகவல்களை தேடுவதற்கான ஒன்லைன் வசதி, மேல் மாகாண வருவாய்த் திணைக்களத்துக்கான தானியங்கி முத்திரைக் கட்டணக் கணக்கீட்டு முறை மற்றும் கொழும்பு காணிப் பதிவேட்டில் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கான தானியங்கி முறைமை உள்ளிட்ட சேவைகளை வழங்க இந்த செயலணி மேற்கொள்ளும். இந்த செயற்பாடுகள் 2023 இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செயலணிக்கு அதன் இலக்குகளை அடைவதற்கு வசதியாகவும் நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் சிக்கல்களைத் தீர்க்கவும் தொழில்நுட்ப அமைச்சு தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அரசுக்கு எதிராக...

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பல எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாரிய சக்தியாக செயற்பட ஆரம்பித்ததன் விளைவாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தன்னிச்சையான வேலைத்திட்டத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிக் குழுக்கள் பல அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ன் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடின.

இன்று (நேற்று) சர்வதேச ஊடக சுதந்திர தினமாகும். இத்தகைய சிறப்புமிக்க வரலாற்று நாளில், எதிர்க்கட்சிகளின் பல முக்கிய அரசியல் கட்சிகள் உங்களுடன் சமூக-பொருளாதார அரசியல் உரையாடலைத் தொடங்கியுள்ளதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். குறிப்பாக நம் நாட்டின் ஜனநாயகத்தின் முக்கிய 3 தூண்களாக நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்க சபை மற்றும் நீதித்துறை ஆகும். 4 ஆவது முக்கிய தூண் சுதந்திர ஊடகம். நீங்கள் ஆற்றிய வரலாற்றுப் பணியின் மதிப்பீடு இந்த ஊடகத் துறையை ஒன்றிணைத்து முற்போக்கான உரையாடல் கருத்துப் பரிமாற்றம் இந்த தருணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக,வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஒவ்வொரு கட்சிக்கும் தனித்துவமான சிந்தனைகளைக் கொண்டுள்ளன. கோட்பாடுகள் உள்ளன. ஆனால் இன்று தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களில் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

உதாரணத்துக்கு, ஊடகக் கட்டுப்பாட்டுக்காக அரசாங்கம் இன்று தயாரிக்கும் ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டத்தைக் குறிப்பிடலாம். அதன் மூலம் சுதந்திர ஊடகங்களுக்கான மரண அடியை எதிர்ப்பது பற்றி எமக்கு பொதுவான கருத்துள்ளது.

மேலும், தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதன் மூலம் 220 இலட்சம் மக்களையும் பயங்கரவாதிகளாகப் புரிந்துகொள்ளும் ஜனநாயக விரோத ஆணையை எதிர்ப்பது பற்றிய பொதுவான புரிதலும் எங்களுக்குள்ளது.

மேலும், சமீபகாலமாக இந்த நாட்டில் நடந்த மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பான எக்ஸ்பிரஸ் பேர்ள் நிகழ்விலும் ஒரு வங்குரோத்தான நாட்டின் அவ்வாறான மாபெரும் பேரழிவிலும் பணத்தை சுரண்டும் முயற்சியை முறியடிக்கவும் அரசின் மிகவும் பிற்போக்குத்தனமான வேலைத்திட்டத்தை முறியடிக்கவும் எதிர்க்கட்சியான நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். இவை ஒரு சில மட்டுமே.

பொது விவகாரங்களில் பல விடயங்களில் நாங்கள் ஒரு இடத்துக்கு வந்துள்ளோம். முதலில், இந்த நேரத்தில் அனைவரையும் மரியாதையுடன் வரவேற்கிறேன்.

இன்று, எதிர்க்கட்சிகளின் பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவாக, நாட்டுக்கு மதிப்பு சேர்க்கும் வகையில் உங்கள் அனைவருடனும் ஒரு முற்போக்கான உரையாடலில் ஈடுபடவுள்ளோம். இந்த முற்போக்கு உரையாடல் மூலம் நாடு மதிப்பு பெற்று உலகின் அனைத்து துறைகளிலும் முதற்தர நாடாக உருவாக வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன் என்றார்.

# தேசிய கொள்கை ஆணைக்குழுவை அமைக்க தீர்மானம்

## அதற்கான வழிகாட்டல் தொடர்பில் தேசிய பேரவையில் பேச்சுவார்த்தை





தேசியக் கொள்கை ஆணைக்குழுவை நிறுவுவதற்கான வழிகாட்டல்கள் தொடர்பில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள், ஆலோசனைகளைப் பெற்று தேசிய கொள்கை ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டில் உள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்களின் கொள்வனவுச் செயற்பாடுகளுக்கும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் (e-Procurement System) பயன்படுத்துவது தொடர்பாக முன்னைய கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டது.

இந்த முறையை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை உபகுழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இதற்கு அமைய இந்த வருடத்தின் ஜூன் மாதத்துக்குள் பல அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களில் இதனை பரீட்சிக்கும் வகையில் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் வருகைதந்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசாங்க நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் எளிதான மற்றும் விரைவான சேவையை வழங்க முடியும் என்பது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அதிகாரிகள் இதற்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்தும் விளக்கமளித்தனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் நசீர் அஹமட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அரசியல் வேறுபாடுகளின்றி நன்மைகள் மக்களை சென்றடைய வேண்டும்

## தமிழ் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் வேறுபாடு கிடையாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் எனவும் அதற்கான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் மக்கள் பிரதிநிதிகள் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று (03) இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட குறித்த கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில்சார் முன்னேற்றங்களுக்காக 1650 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்திருப்பதாகவும் அதேபோன்று வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக சீனா 1500 மில்லியன் ரூபாய்களை வழங்க முன்வந்துள்ளதுடன் இந்தியாவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், எமது மக்களுக்குக் கிடைக்கின்ற இவ்வாறான வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு கிடையாது எனவும் சுட்டிக்காட்டினார்.

இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் அச்சுறுத்தலாக காணப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக ஆராயப்பட்டதுடன் குறித்த விடயம் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்றினை நடத்தி விரிவாக ஆராய்ந்து உறுதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று மாவட்டத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகள், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் தொடர்பான விவகாரம், நீர்ப்பாசனம் சார்பான ஒழுங்குபடுத்தல்கள், கிளிநொச்சி நகர அபிவிருத்தித் திட்டம் போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டதுடன் சில விடயங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியும் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். கஜேந்திரன், எஸ். சிறிதரன், எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் அரசாங்க திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்து கொண்மை குறிப்பிடத்தக்கது.

# Dialog, Axiata - Bharti Airtel தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்து

Dialog Axiata பி.எல்.சி ("Dialog"), Axiata குழுமம் பெர்ஹாட் ("Axiata") மற்றும் Bharti Airtel வரையறுக்கப்பட்டது ("Airtel") (ஒட்டுமொத்தமாக "உரிய தரப்பினர்") ஆகிய நிறுவனங்கள் தமது தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான ஒப்பந்த விதிமுறை பத்திரத்தில் கையெழுத்திடுகின்றன.

பரிவர்த்தனை முடிவடைந்த பிற்பாடு Airtel Lanka வின் மதிப்புக்கு ஈடான Dialog இன் புதிய பங்குகளை Airtel பெற்றுக்கொள்ளும். உரிய தரப்பினருக்கும் ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. முன்மொழியப்பட்ட பரிவர்த்தனையானது நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ஏதேனும் கணிசமான முன்னேற்றங்கள் இருந்தால் உரிய தரப்பினர் அதுகுறித்த அறிவிப்புகளை வெளியிடுவர்.

### Dialog Axiata குழுமம் பற்றி

Dialog Axiata குழுமம், Axiata குழுமம் பெர்ஹாட் (Axiata) இன் துணை நிறுவனமாகும். இது இலங்கையின் முன்னணி Quad-Play (கையடக்க தொலைபேசி, நிலையான தொலைபேசி, டெலிவிஷன் மற்றும் இணையம்) இணைப்பு வழங்குநர் நிறுவனமாகும். நிலையான தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் கட்டண தொலைக்காட்சி, டிஜிட்டல் சேவைகள், நிதி சேவைகள், மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை Dialog Broadband Networks (DBN)) வரையறுக்கப்பட்ட (தனியார்), Dialog Television (DTV) வரையறுக்கப்பட்ட (தனியார்), Digital Holdings Lanka வரையறுக்கப்பட்ட (தனியார்), Dialog Finance பி.எல்.சி, மற்றும் H One வரையறுக்கப்பட்ட (தனியார்) ஆகிய தன்னுடைய துணை நிறுவனங்கள் மூலமாக வழங்குகிறது. இலங்கையின் மொபைல் தொலைத்தொடர்பு துறை சந்தையில் முன்னணியில் திகழும் Dialog Axiata பி.எல்.சி ஆனது கொழும்பு பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகும். மொத்தமாக 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனும் முதலீடு மூலமாக Dialog Axiata குழுமமே இலங்கையின் பாரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர் (FDI) ஆகும்.

### Airtel ஸ்ரீலங்கா பற்றி

2009 ஆம் ஆண்டில் இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் ஸ்ரீலங்கா நிறுவனம் தற்போது ஒருமில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். Airtel Sri Lanka வழங்கும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் சேவை சிறப்புகள் இலங்கை இளைஞர்கள் மத்தியில் வேகமாக பரவியுள்ளது.

தற்போது Airtel இலங்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் அதிநவீன 5G-தயாரான 4G வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளது மற்றும் அதிகபட்ச மதிப்பை வழங்குவதற்காக அதன் நெட்வொர்க் கவரேஜை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

Airtel பற்றி மேலும் அறிய, MyAirtel ஆப் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் Airtel உடன் இணைக்கவும் அல்லது www.airtel.lk ஐப் பார்வையிடவும்.

# ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம்






சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று (03) ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்றலில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஊடகவியலாளர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# மட்டக்களப்பு ஆசிரியர் சங்க தலைவர் மீது தாக்குதல்

**(கனகராசா சரவணன்)**

ஆசிரியரொருவர் பிறிதொரு ஆசிரியரை தாக்கிய சம்பவமொன்று மட்டக்களப்பு நகரிலுள்ள தேசிய பெண்கள் பாடசாலையொன்றில் நேற்று (03) இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது,

மட்டக்களப்பு ஆசிரியர் சங்கத் தலைவர் உதயரூபன் இடமாற்றம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் (02) குறித்த பாடசாலைக்கு கடமையை பொறுப்பேற்கச் சென்றுள்ளார். அதனை அறிந்த பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், அவர் கடமையேற்க இடமளிக்க முடியாது என்றும் அவர் மீது கல்வித் திணைக்களத்தில் 40 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவரை இங்கு கடமையேற்க அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்ததையடுத்து அங்கு ஆசிரியர் சங்க தலைவருக்கும் பாடசாலை அபிவிருத்தி குழுவினருக்கும் இடையே குழப்பநிலை ஏற்பட்டது. இந்நிலையில் எதிர்ப்புகள் பலமடைந்ததால் குறித்த ஆசிரியர் தன்னை பாடசாலை அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த 10 பேர் கடமையாற்ற அனுமதிக்காது தடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை 7.00 மணியளவில் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் பாடசாலைக்கு முன்னால் ஒன்று கூடி கடமையேற்கவரும் ஆசிரியர் சங்கத் தலைவரை பாடசாலைக்குள் அனுமதிக்க விடாது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்க காத்திருந்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலையில் கல்வி கற்பித்துவரும் ஆசிரியர் ஒருவர் சக ஆசிரியர்களிடம் ஆசிரியர் சங்கத் தலைவரை கடமையேற்க விடவேண்டாம் என கோரியதுடன் அவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்த அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுவருவதுடன் கல்வித் திணைக்களமும் ஒழுக்ககாற்று விசாரணை மேற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.

# நிபந்தனையை மீறி மணல் ஏற்றிச் சென்றவருக்கு அபராதம்

**(கோணாவத்தை செய்தியாளர்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிச் சென்ற ரிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி அட்டாளைச்சேனை முல்லைத்தீவு பிரதேசத்தில் மணல் ஏற்றி வந்த ரிப்பர் வாகனமொன்றை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (03)ஆஜர்படுத்தியபோது 10, 000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. தண்டப்பணம் வாகன உரிமையாளரினால் செலுத்தப்பட்டதுடன் வாகனமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

# எடின்பரோ தோட்டத்தில் காலாவதியான 200 கிலோ கோதுமை மா மீட்பு

**(டி.சந்ரு, செ.திவாகரன்)**



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எடின்பரோ தோட்டத்தில் தோட்டத் தொழிலாளிகளுக்கு வழங்குவதற்கு வைத்திருந்ததாகக் கூறப்படும் காலாவதியான 200 கிலோ கிராம் கோதுமை மா நானுஓயா சுகாதார பரிசோதகர்களால் மீட்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த இரகசியத்தகவலின் படி அனைத்து எடின்பரோ தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தேயிலைத் தோட்டத்தொழிற்சாலையின் நுழைவாயிலுக்கு அருகே இருந்து தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் முரண்பட்டுக் கொண்டிருந்தனர். இதனையடுத்து நானுஓயா பொலிஸாருக்கும் நானுஓயா சுகாதார பரிசோதகருக்கும் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே தோட்டத்தின் களஞ்சியசாலையிலிருந்து 200 கிலோகிராம் கோதுமை மா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தோட்ட முகாமையாளர் குறிப்பிடுகையில்,

காலாவதியான கோதுமை மா இருந்தமை உண்மைதான். ஆனால் அவை தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்யவில்லை. தொழிற்சாலையின் களஞ்சியசாலையில் காலாவதியான பொருட்கள் வைத்திருந்த இடத்திலேயே இந்த நான்கு மூடைகள் அடங்கிய 200 கிலோ கோதுமை மாவை வைத்திருந்தோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒருமுறை வழங்கும் கோதுமை மா சுத்தமான ஒதுக்குப்புறமான களஞ்சியசாலையில் புதிய விளம்பர அறிவித்தல்கள் ஒட்டப்பட்டும் காலாவதியாகும் திகதிகள் பொறிக்கப்பட்டும் தனியான அறையில் வைத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தேயிலைத் தோட்டத்தொழிற்சாலையின் நுழைவாயிலுக்கு அருகில் இருந்து தொழிலாளர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவித்ததையடுத்து தொழிலாளர்கள் கலைந்து சென்றனர் .

இதன்போது தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் மேற்கொண்ட விசாரணைகளில் காலாவதியான கோதுமை மா வைத்திருந்தது தெரியவந்தது. அத்தோடு வழமைக்கு மாறாக கோதுமை மாவில் துர்நாற்றம் வீசுவதாகவும் காலாவதியான 200 கிலோ கோதுமை மா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின் உரிய நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக நானுஓயா சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.



நாட்டில் தற்போதுள்ள அரசியல் நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி அரசியல் கட்சித் தலைவர்கள் ஊடக பிரதானிகளை சந்தித்து நேற்று (03) பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். இந்தச் சந்திப்பு கொழும்பு மெண்டரின் ஹோட்டலில் இடம்பெற்றது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம்**
**21 ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** நினைத்த காரியத்தில் வெற்றி.நோய், கடன் நிவர்த்தி, எதிரிகளை வெற்றி கொள்வீர்கள்.

**மிதுனம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலம் கவனம் வேண்டும்.

**கடகம்:** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**சிம்மம்:** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களை சாதிப்பீர்கள்.

**கன்னி:** குதர்க்கமான பேச்சுக்கள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**துலாம்:** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும்.உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மையும் இலாபங்களும் உண்டு, எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**மீனம்:** தொழில், வியாபாரத்தில் அதிக எரிச்சல் கோபம் அடைவீர்கள். எதற்கும் பொருமை இழந்து விடாதீர்கள்.

**திதி:** சதுர்தசி பி.ப.11.44 வரை பின் பௌர்ணமி

**நட்சத்திரம்** : சித்திரை பி.ப.9.35 வரை பின் சுவாதி

**யோகம்** : சித்த யோகம் பி.ப.9.35 வரை பின் அமிர்த சித்தம்.

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.10.53 - 11.53 மணி வரை

**ராகு காலம்** : 1.23 - 2.53 மணி வரை

**எமகண்டம்** : 5.53 - 7.23 மணி வரை

**குளிகை** : 8.53 - 10.23 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்** : ரோஹிணி, அத்தம், திருவோணம். (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்:** சித்திரைச் சித்திரை, சித்திரகுப்த விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மே 04ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஊடக சுதந்திரம் எப்போது கிடைக்கும்?

சர்வதேச ஊடக சுதந்திர குறியீட்டுத் தரவரிசையில் 180 நாடுகளில் இலங்கை 135ஆவது இடத்தில் இருக்கிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு 146ஆவது இடத்தில் இருந்த இலங்கை சற்று முன்னேறி 135ஆவது இடத்திற்கு வந்துள்ளது. தெற்காசியாவில் இந்த ஆண்டு இந்தியாவின் ஊடக சுதந்திர நிலை சரிந்துள்ளது. பாகிஸ்தான் மற்றும் இலங்கையைவிட இந்தியா பின்தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ஊடக செயற்பாடுகளைக் கண்காணிக்கும் அமைப்பான எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு (Reporters Without Borders - RSF) ஆண்டுதோறும் உலக நாடுகளின் ஊடக சுதந்திரம் பற்றிய தரவரிசையை வெளியிடுவது வழக்கம்.

அந்த வகையில் 2002ஆம் ஆண்டில் 180 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இலங்கை 135ஆவது இடத்தில் உள்ளது. இந்தியா 161ஆவது இடத்தில் இருக்கிறது. பாகிஸ்தான் கடந்த ஆண்டு 157ஆவது இடத்தில் இருந்தது. இந்த ஆண்டு 150ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

நோர்டிக் தேசங்களான நோர்வே, அயர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் முறையே முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. கடைசி மூன்று இடங்களில் வியட்நாம், சீனா, வட கொரியா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு ஒரு சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். இது உலகம் முழுவதும் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதை தனது இலட்சியமாக அறிவித்து செயற்பட்டு வருகிறது. இதன் தலைமையகம் பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் அமைந்துள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திரக் குறியீட்டை ஆண்டுதோறும் வெளியிடக் காரணம், உலக நாடுகளிலுள்ள பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தை ஒப்பிட்டுக் காட்டுவதே என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், ஊடக சுதந்திரம் என்பது பத்திரிகையாளர்கள் மக்கள் நலன் கருதி தகவல்களை சேகரிக்கவும், அதைப் பகிரவும் கட்டுப்பாடுகள், அழுத்தங்கள் இல்லாமல் இருப்பதே என்று இந்நிறுவனம் வரையறுத்துள்ளது.

அரசியல், பொருளாதாரம், சட்டம், சமூகம் என எவ்வித அழுத்தங்களும் இல்லாமல் செய்தியாளர்களின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தல் இல்லாமல் செய்திகளை மக்களிடம் கடத்தும் சுதந்திரமே ஊடக சுதந்திரம் எனக் கூறுகிறது.

இலங்கையில் ஊடகம் என்பது தமிழரின் நிலைப்பாட்டைப் பொறுத்தவரை உண்மைகளை முடக்குவதாகவும், உண்மை நிலைக்கு மாறான பரப்புரைகளை நிகழ்த்துவோருக்கு சுதந்திரமானதாகவுமே இருக்கின்றது. உண்மைச் செய்திகளைத் திரட்டி வெளியிட மறுப்பதை அல்லது தடுப்பதை ஊடக முடக்கம் எனலாம். ஊடக முடக்கம் செய்யப்படும்போது ஊடகச் சுதந்திரமும் அந்நாட்டில் அற்றுப் போய் விடுகின்றது.

உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு 'ஊடகச் சுதந்திரம்' மறுக்கப்பட்டுள்ளதோடு, கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் இப்போதும் உள்ளன. உண்மை நிலைப்பாடுகளை மக்களுக்கு அறியத்தர முற்படும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர். ஏற்கனவே பல ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளதால் பல ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேற முற்பட்டுள்ளனர்.

'இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாடு' என அறியப்படும் இலங்கைத் தீவில் எவ்வித ஜனநாயக விதிமுறைகளோ, சோஷலிசக் கோட்பாடுகளோ எதிலும் காண்பதற்கு இல்லை. அப்பாவித் தமிழ் மக்கள் வாய் பேசா ஊமைகளாக, மௌனிகளாக வாழத் தலைப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம் இவ்வாறு இருக்க, அவர்களது எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளை, வாழ்வியல் நிலைப்பாட்டு உண்மைகளை வெளிக்கொணரும் ஊடகங்களின் செய்தி சேகரிப்புக்கு மறைமுக 'ஊடக முடக்கம்' தொடர்கின்றது.

காட்டுத் தர்பார் சுதந்திரத்தையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி இலங்கை அரச, தனியார் ஊடகங்கள் மற்றும் அரசியல் இலாபங்களுக்காக அரசுடன் சார்பாக இயங்கும் அமைப்புகள் தொடர்ந்து உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பிவருகின்றன. அத்துடன், சில தமிழின எதிர்ப்பாளர்களின் கருத்துகளையும் தம்மோடு உள்வாங்கி தமிழர் நலனுக்கு எதிரான கருத்துகளை விதைத்து வருகின்றன. சிங்கள அரச இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தமிழினப் படுகொலைகளையும் புலிகளுக்கு எதிராக சித்தரித்து சிங்களவர்களையும் சர்வதேச சமுதாயத்தையும் நம்பச் செய்து தொடர்ந்து ஏமாற்றவும் முயற்சிக்கின்றன.

போருக்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் படுகொலைகள் குறித்து இதுவரை எந்த விசாரணைகளும் நீதியாக நடக்கவில்லை. குற்றவாளிகள் கண்டறியப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை. ஊடக சுதந்திரம் என்பது வெறும் பேச்சளவில் மட்டுமே இருக்கிறதென்பதே உண்மை. கடந்த சில வருடங்களாக ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படாவிட்டாலும் அவர்களின் குரல்கள் மௌனிக்கப்பட்டிருக்கின்றன. அதுவே உண்மைநிலை. அதுவரை இலவு காத்த கிளி போல ஊடக சுதந்திரம் எப்போது கிடைக்கும் என்று காத்திருக்க வேண்டியதுதான்.



# நாம் நாமாக இருப்போம்!

சிலர் நன்கு படித்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் படித்த பிரிவில் நன்கு தெளிவு பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால், பிறரிடம் பேசும்போதோ, விளக்கம் தரும்போதோ வார்த்தைகள் சரிவர வெளிவராது. வியர்த்துக் கொட்டும். ஏன் இப்படி? தன்னம்பிக்கை என்ற ஒன்று அவர்களிடம் சுத்தமாக இல்லை. எப்போதுமே ஏதாவது தவறாக நடந்துவிடும் என்று பயப்படுவார்கள். இப்படி இருப்பவர்களால் வாழ்வில் உரிய இலக்கைப் பெற முடியாமல் போகின்றது. எளிதில் நோயாளிகள் ஆகி விடுகின்றனர்.

சிலர் எந்த உரிய தகுதியும் இல்லாமல் மிக அதிகமான தோரணையை வெளிப்படுத்துவர். சமுதாயம் இவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கும்போது மனதளவில் மிகவும் பாதிக்கப்படுவார்கள். நிறைய தவறுகள் செய்வார்கள். எளிதில் நோயாளிகள் ஆவார்கள். மது, புகை போன்ற பழக்கங்களுக்கு அடிமை ஆவார்கள்.

மேற்கூறப்பட்ட இரண்டுமே வாழ்வின் தவறான போக்குதான். பொதுவில் ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமரியாதை என்ற ஒன்றுண்டு. அதன் பொருள் நம்மை மிகவும் தாழ்த்திக் கொள்ளவும் வேண்டாம். கற்பனையால் தன்னை மிக உயர்த்திக் கொள்ளவும் வேண்டாம். ஏனெனில், இரண்டுமே ஒருவரின் மனநலம் மற்றும் உடல்நலம் இரண்டையும் பாதித்து விடுகின்றது. இவை இரண்டிற்குமே காரணம் தன்னம்பிக்கையின்மைதான். நாம் நாமாக மட்டுமே இருப்போம். இவ்வாறான நிலையால் மன உளைச்சல் இல்லாமல் போகும். தன்னம்பிக்கையும் பிறக்கும். மேலும், நம் தன்னம்பிக்கையை நாம் உணரவும் வெளிப்படுத்தவும் சில விடயங்களை மேற்கொள்வோம்.

**அடுத்தவரிடம் நேராக முகம் - கண்**

**பார்த்துப் பேசுதல்**

பலர் பேசும்போது எதிரில் உள்ளவரை நேராகப் பார்க்க மாட்டார்கள். தரையைப் பார்த்து, விட்டத்தை பார்த்து என தன் முகத்தை வேறு பக்கம் திருப்பி பேசுவார்கள். இவர்களை எதிராளி கணிக்கும்போது

- ★ இவர் கூச்ச சுபாவம் கொண்டவராக இருக்கலாம்.
- ★ இவரிடம் மறைமுக தவறுகள் இருக்கலாம்.
- ★ ஏதோ சங்கடம் இவருக்கு இருக்கின்றது என்று பல வகைகளில் கருத்து கொள்ளலாம். எனவே, ஒருவரிடம் பேசும்போது அவரது கண்களைப் பார்த்துப் பேசவேண்டும்.

### படபடப்பு

- ★ பொதுவில் உயர் அதிகாரியுடன் பேசும்போது பலருக்கு இவ்வாறு ஏற்படுவதாகக் கூறுகின்றனர். தவறாகப் பேசி விடக்கூடாது என்ற பயத்திலேயே அதிக தவறுடன் பேசுவர்.
- ★ கை நகங்களைக் கடித்து பிய்த்து விடுவர்.
- ★ கால்கள் உதறும்.

மிகவும் படபடப்பான மனிதர். எந்த செயலையும் முறையாக செய்ய மாட்டார் என்ற ஒரு கருத்தை எதிராளி நினைப்பார். இதனால் நீங்கள் நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம்.

இவர்கள் இத்தகைய நேரங்களில் நகங்களை கடிப்பதை உணர வேண்டும். அமைதியான, நிதானமான, ஆழ்ந்த மூச்சை சில முறை செய்தால் போதும். படபடப்பு நீங்கிவிடும்.

### நேராக நிமிர்ந்து நிற்கவேண்டும்

வளைந்து, நெளிந்து, சாய்ந்து கோணலாக நிற்பது ஒருவரைப் பற்றி கோணலான கருத்தையே எதிராளி கொள்வார். நிமிர்ந்து நில்லுங்கள். கம்பீரமாக இருப்பீர்கள். உங்களைப் பற்றிய மரியாதை கூடும்.

### ஆள் பாதி ஆடை பாதி

இதனை நாம் நன்கு கேட்டிருப்போம். இங்கு ஆடை நன்கு இருக்க வேண்டும் என்பது விலை உயர்ந்த ஆடைகள் அல்ல. சுத்தமான, இஸ்திரி செய்த பருத்தி ஆடைகளுக்கு இருக்கும் மதிப்பே தனிதான். இப்படி அணியும்போது நீங்களே மனம் மகிழ்வீர்கள்.

### தெளிவாகப் பேசுங்கள்

எதையும் எப்படி சொல்கின்றோம் என்பது, என்ன சொல்கின்றோம் என்பதை விட பல மடங்கு முக்கிய மானது.

குரல், சொல்லும் வேகம், தொனித் தெளிவு என இவை அனைத்தும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

- ★ குரலே இல்லாமல் முணுமுணுப்பது
- ★ அதிக சத்தம் போட்டு பேசுவது
- ★ வேகமாக பேசுவது
- ★ ஒரே கருத்தை திரும்ப திரும்ப சொல்வது, வார்த்தைகள் சரிவர அமையப் பெறாமல் திணறுவது, சிறு இடைவெளி கூட இல்லாமல் பேசுவது என இவை அனைத்துமே ஒருவரின் மரியாதையை குலைத்துவிடும். எனவே, அமைதியான உறுதியான குரலில் பேசுங்கள். அளவாகப் பேசுங்கள். தெளிவாகப் பேசுங்கள்.

கடுமையான வார்த்தைகளை அகராதியிலிருந்து நீக்கி விடுங்கள். தன்னம்பிக்கையும் கூடும். மரியாதையும் கூடும்.

### புன்னகை புரியுங்கள்

இயற்கை நமக்குக் கொடுத்த சொத்து புன்னகை. மெல்லிய புன்னகை உங்களையும் எதிராளியையும் மகிழ்வாக வைக்கும். மிக சத்தமாக சிரிப்பதும் வில்லத்தனமாக சிரிப்பதும் வேண்டாமே.

### அறிவே பலம்

நிறைய படிக்க வேண்டும். நிறைய கேட்க வேண்டும். நிறைய அறிய வேண்டும். இதனை அன்றாடம் செய்ய வேண்டும். ஏனெனில், அறிவே பலம்.

ஆரோக்கியம் என்பது உடல் உறுப்புகள் சார்ந்தது மட்டுமல்ல. வாழ்வின் முறையையும் சார்ந்தது என்பதை அறிய வேண்டும்.

உயர் இரத்த அழுத்தம் உடையவர்கள் மருந்து எடுத்துக் கொள்வதுடன், கீழ் கூறப்பட்டுள்ளதையும் செய்ய வேண்டும்.

ரிலாக்ஸ் செய்வது அவசியம். மூச்சை ஆழ் மூச்சாக நிதானமாக செய்வதுடன், தியானம் செய்தல் அல்லது படிப்பது, ஓவியம் வரைவது போன்றவை மன அழுத்த அளவைக் குறைக்கும். இது உயர் இரத்த அழுத்தத்திற்கு இயற்கை வைத்தியமாகும்.

தொடர்ச்சியாக மருத்துவர் அறிவுரைப்படி அன்றாடம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நடைப்பயிற்சி, நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் போன்றவையும் நன்மை பயக்கும்.

மருந்து எடுத்துக் கொள்பவர்கள் தமது இஷ்டப்படி மருந்தைக் கூட்டவோ, குறைக்கவோ, நிறுத்தவோ கூடாது.

### மரத்துப் போகுதல் அல்லது உணர்வின்மை

மரத்துப்போகுதல், கிறுகிறுத்த உணர்வு அல்லது ஏதோ ஊசி குத்துவது போன்ற உணர்வு தற்காலிகமாக சிலருக்கு ஏற்படலாம். தோள், கை, கால், பாதம் இவற்றில் இந்த உணர்வு ஏற்படலாம். பல நேரங்களில் இது சாதாரண காரணங்களால் இருக்கலாம்.

ஒரே மாதிரி நிலையில் அதிக நேரம் உட்கார்ந்திருப்பது அல்லது நின்று கொண்டு இருப்பதால் இவ்வாறு ஏற்படும். கழுத்தில் ஏதோ அடி என்றால் அங்கு ஏற்படும் நரம்புத் தாக்குதலால் கை, தோள், விரல்கள் என எங்கும் இடத்திற்கு ஏற்ப மரத்திருக்கும் தன்மையை ஏற்படுத்தலாம்.

கீழ் முதுகில் ஏற்படும் பாதிப்பு கால்களில் மரத்துப் போகும். குறுகுறுக்கும் தன்மையை ஏற்படுத்தலாம்.

தண்டுவட பாதிப்பு நரம்புகளில் தரும் அழுத்தத்தால் ஏற்படலாம். ஹெர்பெஸ், எச்.ஐ.வி. (எய்ட்ஸ்), லெப்ரசி, சிபிலிஸ், டி.பி. போன்ற பாதிப்புகளால் ஏற்படலாம்.

இரத்த ஓட்டத்தில் குறைவு அல்லது இரத்த ஓட்டம் இல்லாமை ஏற்படும்பொழுது - (உதாரணம்) இரத்தக்குழாய் வீக்கம், இரத்தக்குழாய் தடித்தல் காரணமாக பாதிப்பு ஏற்படலாம்.

முறையற்ற அளவில் பொட்டாசியம், கல்சியம், சோடியம் உடலில் இருப்பது காரணமாக இருக்கலாம்.

விற்றமின்களான பி, பி6, பி12 போன்றவைகளின் குறைபாடு காரணமாக இருக்கலாம்.

சில வகை மருந்துகள் எடுத்துக் கொள்வது, மது, புகைபிடித்தல், விலங்குகள் கடித்தல், சில சிகிச்சை முறைகள், கடல் உணவுகளின் விஷத்தன்மை, பூச்சிக்கடி போன்ற காரணங்கள் மற்றும் சில மருத்துவ காரணங்களால் இருக்கலாம்.

மணிக்கட்டில் அழுத்தம், ஒற்றைத் தலைவலி, வலிப்பு நோய், பக்கவாதம், நீரிழிவு நோய் பாதிப்பு, தைரொய்ட் குறைபாடு, இரத்த குழாய்கள் சுருங்குதல் போன்ற காரணங்களாலும் பாதிப்பு ஏற்படலாம்.

சாதாரண காரணம் முதல் பெரிய பாதிப்பு வரை இருப்பதால் மருத்துவர் ஆலோசனை, சிகிச்சை பெறுவதே நல்லது.

மேலும், இந்த பாதிப்புடன் கை, கால் அசைப்பதில் கடினம் இருந்தாலோ, தலை, கழுத்து, பின் முதுகு இவற்றில் அடிபட்டவுடன் கை, கால், நகர்த்துவதில் கடினம் ஏற்பட்டாலோ கை, கால் அசைவை நிறுத்த முடியாவிட்டாலோ, கழிவுப்பொருள் வெளியேற்றம் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தாலோ பேச்சில் தெளிவின்மை, பார்வை தெளிவின்மை, நடப்பதில் பலவீனம் போன்றவை இருந்தாலோ இப்படி சில மாறுபட்ட அறிகுறிகள் தெரியும் பொழுது மருத்துவர் உதவி உடனடி அவசியம்.

தவிர்ப்பு முறையாக,

- ★ அதிக கொழுப்பு இல்லாத, நார்ச்சத்து மிகுந்த உணவுகளை எடுத்துக் கொள்ளலாம்.
- ★ தேவையான அளவு விற்றமின் டி, விற்றமின் பி பிரிவுகளை மருத்துவர் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ளலாம்.
- ★ முறையான உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
- ★ முறையான தேவையான அளவு உறக்கம் அவசியம்.
- ★ மது, புகை பிடித்தல் ஆகியவற்றைத் தவிர்த்திட வேண்டும்.
- ★ மன அழுத்தம் அதிகமின்றி இருக்க வேண்டும்.
- ★ சீரான உடல் எடை இருத்தல் வேண்டும்.
- ★ முதுகு வலியை உடனடியாக கவனிக்க வேண்டும்.

மரத்தல் மற்றும் உணர்வின்மை ஆகியவற்றுக்குப் பல காரணங்கள் உண்டு. மேலும், இரத்தக் குழாய்களில் அடைப்போ அல்லது அழுத்தமோ இரத்த ஓட்டத்தில் தடையை ஏற்படுத்தலாம். இது பொதுவில் மதமதப்பு மரத்து போகுதல், குறுகுறுப்பு ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.

இந்த குறைந்த இரத்த ஓட்டம் மேலும் சில அறிகுறிகளையும் ஏற்படுத்தலாம். கை, கால்களில் சில்லிப்பு, வெளிர்ந்த அல்லது சற்று நீலம் போன்ற சருமம், கால், கணுக்கால், பாதத்தில் வீக்கம், சோர்வு, மூட்டு வலி, தசை வலி போன்ற அறிகுறிகளையும் ஏற்படுத்தலாம்.

நீண்ட கால நீரிழிவு நோய் புற நரம்பு பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆக மரத்துப் போவதையும் குறுகுறுப்பு மற்றும் ஊசி குத்துதல் போன்ற உணர்வை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

*நன்றி - மாலைமலர்*

## இன்றைய நாளில்...

- ★ 1904 – பனாமா கால்வாய் கட்டுமானம் ஐக்கிய அமெரிக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1930 – மகாத்மா காந்தி கைதுசெய்யப்பட்டு யெராவ்தா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.
- ★ 1953 – 'கிழவனும் கடலும்' என்ற புதினத்துக்காக ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, புலிட்சர் பரிசு பெற்றார்.
- ★ 1959 – முதலாவது கிராமி விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
- ★ 1979 – மார்கரெட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமரானார்.

## நக்கல் நமசிவாயம்

தேர்தல் என்ற ஒன்று ஒத்திவைக்கப்பட்டது யாருக்கும் நினைவிருக்குதோ தெரியேல்ல..!



# ஒகஸ்ட் மாதத்திலிருந்து முச்சக்கரவண்டிகளில் கட்டணமானி பொருத்தப்படவேண்டியது அவசியம்

## இல்லாவிட்டால் சேவையில் ஈடுபட அனுமதிக்க முடியாது ; யாழ். மாவட்ட செயலகத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (03) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண அறவீட்டு இயந்திரம் பொருத்தாமையினால் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

இதன் காரணமாகவும் முச்சக்கர வாடகை வண்டி செலுத்துவோர் தொடர்பில் கிடைத்த பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பிலும் தீர்மானம் எடுப்பதற்காக நேற்று (நேற்று முன்தினம்) சம்பந்தப்பட்ட முச்சக்கர வாடகை வண்டி சங்கத்தினர், மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த உத்தியோகத்தர்களை அழைத்து யாழ். மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வாடகை முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சம்பந்தமான பல விடயங்கள் ஆராயப்பட்டது. அதிலே பொருத்தமற்ற அளவுக்கதிகமான ஒலிகளை எழுப்பி செல்லுவது, அநாவசியமான கண்ணாடிகள் பொருத்தி இருப்பது மற்றும் தேசிய கொடியினை அவமதிக்கும் வகையிலே கிழிந்த மாசு படிந்த வாகனங்களுக்கு பொருத்தமற்ற அளவிலான தேசியக்கொடிகளை பொருத்துதல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

குறிப்பாக பயணிகள் மட்டுமல்லாது வீதிகளில் பயணிப்போரும் அச்சப்படுளவுக்கு உயர்ந்த ஒலிகளை எழுப்புகின்ற கருவிகளை முச்சக்கர வண்டிகளிலே பொருத்துவது தடுக்கப்பட வேண்டும். அதுபோல் வாடகை முச்சக்கர வண்டியை செலுத்துபவர்கள் மரியாதைக்குரிய ஆடைகளை அணிந்து நல்ல பழக்க வழக்கங்களை கொண்டிருக்க வேண்டும் போன்ற விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு பதிவு செய்யப்படாத வாடகை முச்சக்கர வண்டிகளும் யாழ்ப்பாண நகர பகுதிகளில் பல தொல்லையாக இருப்பதாக மாநகர சபையினால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

சட்டத்தின் பிரகாரம், நாடு முழுவதிலும் கட்டணம் வசூலிப்பது அந்தந்த முச்சக்கர வண்டிகளுக்கு உரிய கட்டண அறவீட்டு இயந்திரம் பொருத்தப்பட வேண்டும். ஆனால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அது நடைமுறையில் இல்லை. இதனால், பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இந்த கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அவர்களுடைய தகுதிக்கேற்ப ஒரு நாளைக்கு குறைந்தது 40 வரையிலான மானிகளை தான் முச்சக்கர வண்டியில் பொருத்த முடியும்.

போக்குவரத்து அதிகார சபையின் கணக்கெடுப்பின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் சேவையில் உள்ளன. யாழ்ப்பாண நகர் பகுதியில் 2025 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, ஜூலை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக வாடகைக்கு அமர்த்தப்படுகின்ற சகல முச்சக்கர வண்டிகளும் கட்டண அறவீட்டுமானியை பொருத்த வேண்டும். பொருத்தப்பட்டால் மாத்திரமே சேவையில் ஈடுபட அனுமதிக்க முடியும். ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தப்படாத முச்சக்கர வண்டிகளின் வாடகை வண்டியாக பாவிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி மாநகர சபையும் அதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும் என்றார்.



சர்வதேச பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, வரையறுக்கப்பட்ட ஊடகவியலாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (03) கொழும்பு மெண்டரின் ஹோட்டலில் இடம் பெற்றது.

# இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் உறுதி



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக இலங்கையை பாராட்டுவதாகவும் இலங்கைக்கு மேலும் ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக் கூட்டம் கொரியாவின், சியோலில் நடைபெற்றுவருகின்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக கொரியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம (02) ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நெருக்கடி நிலைமையின்போது ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய சிறந்த கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்புக்காகவும், நாட்டின் மீட்சி செயல்முறைக்கு ஆதரவளித்தமைக்காகவும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாழ்த்துக்களைத் தெரிவித்த அமைச்சர் சப்ரி, டிஜிட்டல் மயமாக்கல், விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நிதித்துறை ஸ்திரத்தன்மை ஆகிய துறைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் தொழில்நுட்ப ஆதரவையும் நிதி உதவியையும் மேலும் கோரினார்.

ஒரு பெரிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும் நாட்டின் மீட்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைப்பதற்கும் இலங்கை இதுவரை மேற்கொண்டுள்ள ஊக்கமளிக்கும் பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இலங்கையுடன் பல்வேறு துறைகளில் புதுப்பிக்கப்பட்ட வீரியத்துடன் தொடர்ந்து ஈடுபடுவதாகவும் உறுதியளித்தார்.

# 12 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

டெங்கு மற்றும் இரத்த பரிசோதனைக்காக வர்த்தமானியிலிடப்பட்ட உரிய கட்டணத்தைவிட அதிக கட்டணம் அறவிட்ட 12 தனியார் மருத்துவமனை மற்றும் இரசாயன பகுப்பாய்வு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த 12 நிறுவனங்களிடமிருந்து 94 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிரேஷ்ட விசாரணை அதிகாரி ஏ.யூ. ரஞ்ஜன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, நுகேகொடை, மாலிகாகந்த மற்றும் கல்கிஸை ஆகிய நீதிமன்றங்களினால் இந்த தண்டப்பணம் தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தென்மராட்சி-மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச்சாட்டி பூதவரத விநாயகர் தேவஸ்தானத்தின் மகோற்சவப் பெருவிழா அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து சிவஸ்ரீகிரிதரக்குருக்கள் தலைமையில் 10தினங்கள் வருடாந்த மகோற்சவத் திருவிழா இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - சாவக்கச்சேரி நிருபர்)




**சுங்க நடவடிக்கைகள் தொடர்பான பரஸ்பர ஒத்துழைப்புக்களுக்கான அவுஸ்திரேலிய தேச எல்லைகள் படையணிக்கும் இலங்கை சுங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சுங்கத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய இருதரப்பினர்களுக்கிடையில் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் இலங்கைச் சுங்கத்துக்கும் அவுஸ்திரேலியா தேச எல்லைகள் படையணிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, இரு நாடுகளிலும் நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நடவடிக்கை முறைகள் மற்றும் கொள்கைகளுக்கமைய, சுங்க நடவடிக்கைகளுக்குரிய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிகளைப் பலப்படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் போன்றவையே முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும். தயாரிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**லக்சம்பர்க் (Luxembourg) அரச வெளிவிவகார மற்றும் ஐரோப்பிய விவகாரங்கள் அமைச்சுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

லக்சம்பர்க் அரச வெளிவிவகார மற்றும் ஐரோப்பிய விவகாரங்கள் அமைச்சுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பு ஒத்துழைப்புக்கள் தொடர்பாக அரசியல், பொருளாதார, வணிக, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்புத் தொடர்புகளை ஊக்குவித்தல், பலப்படுத்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கும் லக்சம்பர்க்குக்கும் இடையில் இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்தை மையமாகக் கொண்டு திருத்தங்களை மேற்கொள்ளுமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்ள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரசியல் உரிமைகள் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகைகளை வழங்கல்**

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பாளர்களாக வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரச ஊழியர்கள் தொடர்பாக தேர்தல் நடத்தப்படும் வரைக்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களைக் கருத்தில் கொண்டு, அவ்வாறான அரச உத்தியோகத்தர்கள் தாம் வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடவுள்ள தேர்தல் வட்டாரத்தில் அமைந்துள்ள அரச/பகுதி அரச நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டிருப்பின், அவர்கள் மீண்டும் கடமைக்கு சமுகமளிப்பதற்கு இயலுமாகும் வகையில் குறித்த தேர்தல் வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்து கடமையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக அரச பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்**

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் 73 ஆவது ஆண்டறிக்கை 2023.04.27 ஆம் திகதி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டது. நிதிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கமைய ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் குறித்த அறிக்கையை நிதி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை பாராளுமன்றுக்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ஆசியான் பிராந்திய ஒன்றியம் (ASEAN Regional Forum)**

ஆசியான் பிராந்திய ஒன்றியத்தின் (ARF) அங்கத்துவ நாடான இலங்கை 2022-2024 காலப்பகுதிக்கான அணுவாக்கல் பெருக்காமை மற்றும் ஆயுதக் குறைப்பு பற்றிய இடைக்கால கூட்டத்தொடரின் இணைத்தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தது. 2023 மே மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் ஆசியான் பிராந்திய ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான 14 ஆவது இடைக்கால கூட்டத்தொடரை நடத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. குறித்த இடைக்கால கூட்டத்தொடருக்கான வசதியளிப்புக்களை மேற்கொள்வதற்காக தனது அமைச்சால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்காவை அரச – தனியார் பங்குடமை முறைமையின் கீழ் முகாமைத்துவம் செய்தல்**

மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்காவை அரச – தனியார் பங்குடமை முறைமையின் கீழ் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை 2023.02.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கு அதுபற்றி விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக குறித்த முன்மொழிவை அரச – தனியார் பங்குடமையில் தேசிய முகவராண்மை நிறுவனத்துக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த முகவராண்மை நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்காவை அரச – தனியார் பங்குடமை முறைமையின் கீழ் 3 முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திறைசேரி முறிகள் வெளியிடும் அனுமதிக்கப்பட்ட எல்லையை திருத்தம் செய்தல்**

2022 நவம்பர் மாதம் பாராளுமன்றத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளை வெளியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட எல்லை 5,000 பில்லியன்களாகும். 2023 மார்ச் மாதம் இறுதியாகும் போது செலுத்தப்பட வேண்டிய மொத்த திறைசேரி முறிகள் மீதி 4,636 பில்லியன் ரூபாய்களாகும். 2023 ஆம் ஆண்டுக்கான 4,979 பில்லியன் ரூபாய்கள் அண்ணளவான கடன் பெறல் எல்லைக்கான பாராளுமன்ற அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அவற்றில் 3,526 பில்லியன் ரூபாய்கள் உள்ளூர் மூலங்களிலிருந்தும் மற்றும் 1,453 பில்லியன் ரூபாய்கள் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் கடன் பெறல் பிரதானமாக திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி பிணையங்கள் வெளியிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய, திறைசேரி முறிகளை வெளியிடுவதற்காக தற்போது நிலவுகின்ற உயர்ந்தபட்ச எல்லையை திருத்தப்பட வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, திறைசேரி முறிகளை வெளியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட எல்லையை 6,000 பில்லியன் ரூபாய்கள் வரைக்கும் அதிகரிப்பதற்கும் அதற்காக பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்துக்காக 2022.11.21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சடடமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.05.02
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5104 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,410,656.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 7 3 3 1 2 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3346 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,714,030.24
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 45 71 77 78

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1559 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,507,820.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 9 5 2 5 9 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1134 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,572,545.60
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 08 34 59 67

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 413 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,645,137.80
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 25 35 36 39 — விசேட இலக்கினம் மேஷம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1452 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 318,658,650.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 21 28 38 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ‘மலேரியா நோயின் பரம்பலைத் தடுத்தல்’ வைத்தியர் கேதீஸ்வரன் விசேட அறிவிப்பு



இலங்கையில் மலேரியா நோயின் உள்ளூர் தொற்று இறுதியாக 2012ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டது. அதன்பின்னர் இதுவரை உள்ளூர் பரம்பல் காரணமாக எந்தவொரு நோயாளியும் இனங்காணப்படவில்லை. ஆனாலும் மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று இலங்கைக்கு திரும்பி வந்தவர்களில் பலருக்கு மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டபோது இதனை தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களில் 15 பேர் மலேரியா நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்திலும் மேற்கு ஆபிரிக்க நாடொன்றுக்கு சென்று திரும்பிய உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி மலேரியா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்தவருடம் ஏப்ரல் மாதத்தில் எமது நாட்டில் 14 வருடங்களுக்குப் பின்னர் மலேரியா நோயினால் ஒரு இறப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பேருவளை பிரதேசத்தில் இருந்து இரத்தினக்கல் வியாபார நோக்கத்துக்காக ஆபிரிக்கா சென்று திரும்பிய ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

எமது நாட்டில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் உலர்வலயப் பிரதேசங்களில் இன்னமும் காணப்படுகின்றன. இந்நிலையில் மலேரியா பரம்பல் உள்ள நாடொன்றுக்கு சென்று அங்கு நோய் தொற்றுக்குள்ளாகி வருபவர்கள் மூலம் உள்ளூரில் மலேரியா பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது.

வெளிநாடொன்றில் மலேரியா தொற்றுக்குள்ளாகும் ஒருவருக்கு ஒரு வருட காலம்வரை எந்தவித நோய் அறிகுறிகளும் இல்லாது காணப்படலாம். ஆனால் அவர் மூலம் ஏனையவர்களுக்கு இந்நோய் பரவும் வாய்ப்புள்ளது. எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் மலேரியா தடுப்பு மருந்துகளைப் பாவிக்க வேண்டும். தற்போது பின்வரும் நாடுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படுகின்றது.

தென்னாபிரிக்கா, உகண்டா, சூடான், ருவண்டா, மொசாம்பிக், மடகஸ்கார், மத்திய ஆபிரிக்க குடியரசு, கானா, சைபீரியா, தன்சானியா, சிம்பாவே, பப்புவா நியூகினியா, சீரோலியான், சவூதி அரேபியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தடுப்பு மருந்தை பாவிக்க தொடங்குவதன் மூலம் மலேரியா தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம். இத்தடுப்பு மருந்துகளைத் தங்களுக்கு அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது யாழ்ப்பாணம் பண்ணை சுகாதார கிராமத்திலுள்ள மலேரியா தடை இயக்க பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று திரும்பிவந்த பின்னர் மலேரியா குருதிப் பரிசோதனையை கிரமமாக செய்வதன் மூலம் மலேரியா தொற்று உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். எனவே எமது நாட்டில் மலேரியா நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் வேண்டிநிற்கின்றோம் - என்றுள்ளது.

# அனுமதியின்றி மணல் கொண்டு சென்றவர்கள் மண்டைதீவில் கைது

(யாழ்.நிருபர்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஊர்காவற்றுறை பகுதிக்கு இரண்டு டிப்பர் வாகனங்களில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மணல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் டிப்பர்களை மறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் சோதனையிட்டபோது மணல் எடுத்துச் செல்வதற்கான அனுமதியின்றி கொண்டு செல்லப்படுவதனை பொலிஸார் அறிந்து அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்ததுடன், டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றினர்.

விசாரணைகளின் பின்னர் சாரதிகளையும் வாகனங்களையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சுன்னாகம் மயிலணி வித்தியாலயம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது





(மு.தமிழ்ச்செல்வன்)

மதர் ஸ்ரீலங்கா நிறுவனம் கல்வியமைச்சுடன் இணைந்து பாடசாலை மதர் ஸ்ரீலங்கா கழகங்களுக்கிடையே சமூக பொறுப்பு, ஐக்கியம், திறன்விருத்தி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் நடத்திய போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

வெற்றிப்பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வானது கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்றது. இதன்போது பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, 3 மில்லியன் ரூபா செலவில் கணினி ஆய்வுகூடமும் அமைத்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் குறித்த பாடசாலை மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் நடன ஆற்றுகையும் இந்நிகழ்வில் இடம்பெற்றது. மேலும் சிறப்பாகச் செயற்பட்ட கழகத்துக்கான விருது தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித மன்றம் நடத்திய கற்றல் உபகரண கண்காட்சி செவ்வாய்க்கிழமை(02) பிற்பகல் 2 மணிக்கு கலாசாலையில் இடம்பெற்றது. கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி அருணாசலம் குகன் கலந்து கொண்டார். கணித மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் இ. இராஜபாலன் வாழ்த்துரை வழங்கினார். ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம்வரை கணிதம் கற்கும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய கற்றல் உபகரணங்களை ஆசிரிய மாணவர்கள் உருவாக்கி காட்சிப்படுத்தினர்.

# பிறந்து 34 நாட்களேயான குழந்தை மர்மமான முறையில் உயிரிழப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத்தில் பிறந்து 34 நாட்களேயான குழந்தை ஒன்று மர்மமான முறையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது. பொன்னாலை பகுதியை சேர்ந்த விதுஜன் கிஷான் எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது. குழந்தையின் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்ததை அவதானித்த பெற்றோர் குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதன்போது குழந்தையை பரிசோதித்த வைத்தியர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என அறிக்கையிட்டனர். குழந்தையின் உயிரிழப்புக்கான காரணங்கள் தெரியவராததால், குழந்தையின் சடலத்திலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# நுவரெலியா வசந்த காலத்தில் துர்நாற்றம் வீசும் குப்பைகள்

## பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்?



(செ.திவாகரன்)

ஒவ்வொரு வருடமும் நுவரெலியாவில் நடத்தப்படும் வசந்த காலத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளும் களியாட்ட விழாக்களும் ஏற்பாடு செய்யப்படுவது வழமை. இம்முறையும் அவ்வாறான பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. எனினும், பல்வேறு இடங்களில் குப்பைகள் அகற்றப்படாமல் காணப் படுவதுடன்துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

வசந்தகால நிகழ்ச்சிகள் கொண்டாடுவதற்கு முன் தூய்மையாக இருந்த மைதானம் தற்போது குப்பை கழிவுகள் நிறைந்த பகுதியாக மாறியுள்ளது. ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 30ஆம் திகதிவரை உரிய முறையில், உரிய நாட்களில் குப்பை சேகரிக்கப்படாமையினால் ஒவ்வொரு பகுதிகளும் குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது.

குப்பைகளால் சூழப்பட்டுள்ள மைதானத்தினால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க ஆரம்பித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் வசந்தகால நிகழ்ச்சிகள் நிறைவு பெற்று மூன்று நாட்கள் கடந்தும் குப்பைகள் நிரம்பியுள்ள பகுதிகளை கண்காணித்து மாநகரசபை ஊழியர்கள் அகற்றவில்லை.

இதனால் அங்கு துர்நாற்றம் வீசுவது மாத்திரமன்றி ஈக்கள், நுளம்புகளின் பெருக்கமும் அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளன.

எனவே, குறித்த பகுதிக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென். கிளயர் பாடசாலையின் அதிபராக தினகரன் நியமனம்



(தலவாக்கலை செய்தியாளர்)

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட தலவாக்கலை சென்.கிளயர் தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக வேலாயுதம் தினகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண மற்றும் கல்வி அபிவிருத்தி பணிப்பாளர் கணேஸ்ராஜ் ஆகியோரால் வழங்கப்பட்டது.

வேலாயுதம் தினகரன், பத்தனை கெலிவத்தையை சேர்ந்த வேலாயுதம் - மாரியாய் தம்பதியினரின் மூன்றாவது புதல்வராவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கெலிவத்தை தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலை கல்வியை திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விவசாய விஞ்ஞானப் பாட ஆசிரியராக தனது ஆசிரியர் பயிற்சியை முடித்து கொத்மலை குயின்ஸ்பெரி தமிழ் வித்தியாலயம், கொத்மலை கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை சென்.கிளயார் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

கல்வித்துறை மட்டுமின்றி கலை இலக்கிய, சமூக, அரசியல் செயற்பாடுகளிலும் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட இவர் மலையகத்தின் குறிப்பிட்டுக் கூறக்கூடிய கவிஞர்களுள் ஒருவராவார்.

இவர் தனது கலைமாணி பட்டத்தையும், மொழி பெயர்ப்பில் டிப்ளோமா பாட நெறியை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் வாண்மையாளருக்கான ஆங்கில சான்றிதழ் பாடநெறியை பெனிதெனிய தேசிய கல்வியற் கல்லூரியிலும் ஆசிரிய கல்வியில் முதுமாணிப் பட்டத்தினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற மூன்றாம் தர அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், கடந்த ஜனவரி மாதம் மத்திய மாகாண கல்வியமைச்சில் இடம்பெற்ற அதிபர் வெற்றிட பாடசாலைகளுக்கான அதிபர் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு தலவாக்கலை சென்.கிளயர் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# இறக்குவானை - காலி வீதியில் மண்சரிவு அபாய எச்சரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தின் சூரியகந்த, தெனியாய உடனான காலி வீதியில் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. கொலன்ன பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் அடைமழையின் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் அமில விஜேரத்ன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எனவே, மண்சரிவு ஏற்படுமென அடையாளங் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசங்கள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆய்வுகள் நடத்தப்பட்டு ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. எனினும் இப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் சிலர் அவதானத்தையும் பொருட்படுத்தாமல் இவ்விடங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, உயிர், உடைமை சேதங்களைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் இவ்விடங்களில் வசிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மேலும், ஏ 17 வீதியில் மண்சரிவு ஏற்பட்டால் காலி, இரத்தினபுரி, இறக்குவான மாதம்பையுடன் தொடர்புடைய பகுதிகளுக்கான போக்குவரத்து தடைப்படும் என இரத்தினபுரி இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன அறிவித்துள்ளன.

இதேவேளை, சில தினங்களுக்கு முன் இவ்வீதியில் ஏற்பட்ட மண்சரிவினால் பிரதேசத்தின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த அதிபர் கம்பளையில் கைது

(கலஹா செய்தியாளர்)

கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட புபுரஸ்ஸ பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழ் மொழிமூல பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவிகள் இருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாகக் கூறப்படும் குறித்த பாடசாலையின் அதிபரை புபுரஸ்ஸ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே குறித்த அதிபர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் (02) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

14 மற்றும் 15 வயதுகளுடைய மாணவிகள் பொலிஸாருக்கு வழங்கியதாகக் கூறப்படும் வாக்குமூலத்தில் கலஹா பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய மேற்படி அதிபர் பாடசாலை முடிந்து பஸ்ஸில் வீட்டுக்கு பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் மாணவிகள் அருகில் அமர்ந்து கொள்வதுடன் அவர் கடமைக்கு பயன்படுத்தும் பையினை வைத்து மறைத்து கொண்டு பாலியல் ரீதியிலான சில்மிஷங்களில் ஈடுபட்டுவந்ததாக தெரிவித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக இதற்கு முன்னரும் வலயக்கல்வி பணிமனையில் பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் அங்கு இடம்பெற்ற விசாரணையில் திருப்தியின்மை காரணமாகவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முறையற்ற வகையில் கலாநிதி, பேராசிரியர் பட்டங்களைப் பயன்படுத்துவதை தடுத்தல்

## சட்ட ஏற்பாடுகளை தயாரித்து பகிரங்கப்படுத்துமாறு கோப் குழு பரிந்துரை

முறையற்ற வகையில் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை ஒரு மாதத்துக்குள் தயாரித்து பகிரங்கப்படுத்துமாறு கோப் குழு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் உயர்கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அழைத்திருந்தது.

இதன்போது கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்ட பிரதான 10 விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதாவது நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை பின்பற்றுவது தொடர்பான சிக்கல்கள், Z புள்ளி முறைமைக்கு மேலதிகமாக ஒரு சில பாடங்களுக்கு நடைமுறைப் பரீட்சை நடத்துவதால் உயர்ந்த புள்ளிகளைக் கொண்ட ஒரு சில மாணவர்களுக்கு இடம்பெறும் அநீதி,பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு வருகையை உறுதிப்படுத்தும் சரியான முறைமையொன்று இல்லாமை, முறையான ஒழுங்குபடுத்தல் இல்லாமை காரணமாக சட்டவிரோதமாக கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களைப் பயன்படுத்தல், தனியார்பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களால் வழங்கப்படும் பட்டங்கள் தொடர்பான ஒழுங்குவிதி,தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பின் தரத்தை உயர்த்துதல் மற்றும் தொழிற் சந்தைக்குப் பொருத்தமான வகையில் பாடநெறிகளை தயாரிப்பதன் அவசியம்,பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) தவறாகப் பயன்படுத்தப்படுவதால் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் அவசியம், பல்கலைக்கழக கட்டமைப்பின் மனிதவளத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் புரிந்துணர்வுடன் செயற்படுதல், அதிகமான வெளிநாட்டு மாணவர்களை கவரும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதன் அவசியம் ,பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்தரப் பரீட்சை விடைப்பத்திர மதிப்பீட்டிலிருந்து விலகியுள்ள நிலையில் அந்தப் பணிகளை மீண்டும்






தொடங்குவதற்கு சாதகமான தலையீடு செய்தல்,இந்நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பின் தரத்தை உயர்த்துவது மற்றும் தொழிற்சந்தைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குதல் என்பன தொடர்பில் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

2021இல் பல்கலைக்கழக நுழைவு கிடைக்கும் 26 வீதமானவர்கள் கலைத்துறையில் உயர்தரத்துக்கு தோற்றியவர்கள் என்றும் விஞ்ஞானத் துறையில் பல்கலைக்கழகத்துக்கு பிரவேசிப்பவர்கள் ஒப்பீட்டளவில் குறைவாகும் எனவும் இதன்போது புலப்பட்டது. எனினும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் பல்கலைக்கழகம் பிரவேசிப்பவர்கள் அதிகம் எனச் சுட்டிக்காட்டிய குழு, இந்தநிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியது. இந்நாட்டில் உயர்தரத்தைக் கொண்ட பாடசாலைகள் 2952 உள்ளதாகவும் அவற்றில் 1011 பாடசாலைகளில் மாத்திரமே விஞ்ஞானத் துறையில் கற்க முடியும் எனவும் 1941 பாடசாலைகளில் விஞ்ஞானத் துறையில் கற்பித்தல் இடம்பெறுவதில்லை என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். அதாவது உயர்தரத்தைக் கொண்ட 65முதல்75 வீதமான பாடசாலைகளில் விஞ்ஞானத்துறை இல்லாமை சிக்கலானது என இதன்போது கலந்துரையாடப்பட்டது. STEM கல்வி முறையினூடாக இதற்கு தீர்வு வழங்க ஆரம்பித்துள்ளதாகவும் இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது தெரிவித்தார். இதுதொடர்பில் விரைவாகத் தலையிட்டு உயர்கல்விக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அதிக மாணவர்களை அனுப்புவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. நவீன தகவல் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதனால் தாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது உள்ளிட்ட ஆணைக்குழுவின் வேலைத்திட்டத்தைப் பாராட்டிய கோப் குழு மேலும் இந்நாட்டின் பல்கலைக்கழகங்களை சர்வதேச அளவுக்கு தரமுயர்த்த வேண்டும் என தெரிவித்தது. விசேடமாக சர்வதேச மாணவர்களை இந்நாட்டின் பல்கலைக்கழகங்களுக்கு அதிகமாக கொண்டுவருவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

திறந்த பல்கலைக்கழகத்தில் மென்பொருள் பொறியியல் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டு வருடமொன்றுக்கு 90000 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றமை இதன்போது புலப்பட்டது. பொதுவாக தனியார் பல்கலைக்கழகமொன்றில் சுமார் 2 – 3 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த பட்டத்தை 3 இலட்சம் ரூபாவுக்கும் குறைவான செலவில் கற்க முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அதனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக இது தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழுவுக்கு கோப் குழு உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கினர்.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை நீக்குவதற்குப் பதிலாக தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு ஆணைக்குழுவை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை குழு சுட்டிக்காட்டியது. உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை உறுதி செய்வதற்கான (Quality Assurance) புதிய சட்டத்தின் மூலம் தனி நிறுவனமொன்றை அமைப்பது தொடர்பான யோசனை குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அதற்கான அதிகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குவதே மிகவும் பொருத்தமானது என குழு சுட்டிக்காட்டியது. இதற்கான அதிகாரங்கள் ஆணைக்குழுவுக்கு ஏன் வழங்க வேண்டும் என்பதை ஒரு மாதத்துக்குள் குழுவிடம் தெரிவிக்குமாறு குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் அது தொடர்பாக தலையிடுவதற்கு கோப் குழு தயாராக இருப்பதாகவும் கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார். உயர் கல்விக்காக வெளிநாடு சென்று திரும்பிவராத விரிவுரையாளர்களிடமிருந்து கிட்டத்தட்ட 2 பில்லியன் ரூபாய் அறவிட வேண்டும் என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இத்தொகையை உரிய உத்தரவாதம் வழங்கியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இவ்வாறு வெளிநாடு சென்ற 617 ஆசிரியர்களுள் 84 பேரே இதுவரை உரிய கொடுப்பனவுகளை செய்துள்ளதாக தெரியவந்தது.

அதன்படி, இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு மாதத்துக்குள் கோப் குழுவுக்கு அறிவிக்குமாறு குழு பரிந்துரைத்தது.பல்கலைக்கழக பிரவேசத்தின் போது ஒரு சில பாடங்களுக்கு நடைமுறைப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய குழு இதன் மூலம் அதிக Z புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியது. அந்தப் பாடங்களுக்கு உயர்தரப் பரீட்சையின் போதும் நடைமுறைப் பரீட்சை நடத்தப்பட்டு Z புள்ளிகள் வழங்கப்படுவதால் மேலும் நடைமுறைப் பரீட்சை அவசியமில்லை என வலியுறுத்தப்பட்டது. அதற்கமைய இது தொடர்பில் உடனடியாக முடிவெடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பரிந்துரைத்தது.

கணக்காய்வாளர் நாயகம் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டியபடி பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு வருகையை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை விரைவாகத் தயாரிக்குமாறு கோப் குழு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைத்தது.ஒரு சிலர் பல்வேறு நிறுவனங்களால் சட்டரீதியற்ற வகையில் வழங்கப்படும் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களை பயன்படுத்துவது குறித்து குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை என ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இதனால் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்கள் இழிவுபடுத்தப்படுவதால் இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு தலையிட வேண்டும் எனவும் கோப் குழு வலியுறுத்தியது. அதற்கமைய மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட மாற்றங்களை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. இந்தப் பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக இரண்டு மாதங்களில் மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை அழைப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, ரோஹித அபேகுணவர்தன, இரான் விக்கிரமரத்ன, ஜகத்குமார சுமித்ரா ஆரச்சி,மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய மற்றும் மதுர விதானகே ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# ஒரு தலைவரின் உறவு, ஒரு தேசத்தின் குரல் – மன் கீ பாத்தின் 100ஆவது நிகழ்வு





மன் கீ பாத் நிகழ்ச்சியின் நூறாவது ஒளிபரப்பைக் கொண்டாடும் முகமாக குறித்த வானொலி நிகழ்வானது உலகளாவிய ரீதியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டதுடன் கொழும்பிலுள்ள சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்திலும் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி விசேடமாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

மக்களின் பங்கேற்பு மற்றும் நேர்மறை எண்ணம் ஆகியவற்றைக் கொண்டாடும் முகமாக இந்த வானொலி ஒலிபரப்பின் பயணம் குறித்த நினைவுகளை பிரதமர் மீள நினைவூட்டுவதாக மன் கீ பாத்தின் நூறாவது நிகழ்ச்சி அமைந்திருந்தது.

சமூக மாற்றங்களை இலக்காகக் கொண்ட வெகுஜன இயக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் இந்த நிகழ்வு ஏற்படுத்தியிருக்கும் மாற்றத்தக்க தாக்கத்தை பிரதமர் இங்கு குறிப்பிட்டிருந்தார். பெண்களை வலுவூட்டல், உள்ளூர் கைவினைப் பொருட்களின் மேம்பாடு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் காணப்படுகின்ற பிரபலமான கதைகளையும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வானொலி நிகழ்வு நினைவூட்டியிருந்தது. அதுமட்டுமல்லாமல் இந்தியா தற்போது ஜி 20 அமைப்புக்கு தலைமை வகிக்கும் நிலையில் சர்வதேச நிகழ்ச்சி நிரலில் கலாசாரம் மற்றும் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதற்காக இந்தியா முன்னெடுத்துவரும் முயற்சிகள் தொடர்பாக பிரதமருக்கும் யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையிலான சம்பாசனையும் இந்த சிறப்பு வானொலி நிகழ்வில் இடம்பெற்றிருந்தது.

இந்த நேரடி வானொலி ஒலிபரப்பைத் தொடர்ந்து "மன் கீ பாத் ஒரு தலைவரின் உறவு ஒரு தேசத்தின் குரல்" என்ற தொனிப்பொருளில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது. இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, லிபர்ட்டி பதிப்பகம் மற்றும் தெரண நிறுவனத்தின் தலைவர் திலிப் ஜெயவீர, ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் டினூக் கொலம்பகே மற்றும் FCBkl.lk தலைவர் சந்தோஷ் மேனன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். பொது நன்மைக்காக தனி நபர் வளங்களை அல்லது ஆற்றலை ஒன்று திரட்டுவதற்கான இத்தளத்தின் இயலுமை தொடர்பாக இக்கலந்துரையாடலில் கருத்துகள் பரிமாறப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாமல் வினைத்திறன் மிக்க தொடர்பாடலுக்கு உணர்வு ரீதியான பிணைப்பின் அவசியம் தொடர்பாகவும் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அத்துடன் மன் கீ பாத்தின் அணுகுமுறை காரணமாக இந்தியாவின் வளர்ச்சிப் பாதையின் மையப்பகுதியில் மக்கள் காணப்படுகின்றமை அதன் சிறப்பம்சமென உயர் ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

மேலும் பகிர்தல், கற்றல் மற்றும் தேசிய அளவிலான இலக்குகளை அடைவதற்கு வெகுஜன இயக்கத்தை உருவாக்குதல் போன்றவற்றுக்கான தளத்தை இந்நிகழ்ச்சி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையைச் சேர்ந்த இந்தியாவின் நண்பர்கள், உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் இந்திய சமூகத்தின் அங்கத்தவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

சமகாலம் குறித்த பல்வேறு தொனிப்பொருட்கள் மற்றும் விவகாரங்கள் குறித்து இந்திய மக்களுடன் உரையாடுவதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் நடத்தப்பட்ட ஒரு மாதாந்த வானொலி நிகழ்வே மன் கீ பாத் ஆகும்.

இந்நிகழ்வில் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள், இந்தியாவின் கலாசார மரபு மற்றும் பன்முகத்தன்மை, மக்களின் அசாதாரண சாதனைகள், உலகளாவிய நிகழ்வுகளின் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.







களுத்துறை கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், இந்து மகளிர் அணி, அறநெறி பாடசாலை மற்றும் இந்து இளைஞர் மன்றம் என்பன இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா களுத்துறை, வெட்டுமங்கட விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் போட்டி நிகழ்வுகளையும் காணலாம். (படங்கள்: பேருவளை நிருபர்)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (03.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 207.6893 | 220.2296 |
| கனேடியன் டொலர் | 228.2992 | 242.1919 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.5255 | 48.0537 |
| யூரோ | 344.3821 | 362.9363 |
| ஜப்பான் யென் | 2.2959 | 2.4197 |
| சிங்கப்பூர் டொலர் | 233.9207 | 247.0936 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.4879 | 410.6642 |
| சுவிஸ் பிரான்ங் | 348.9889 | 370.5866 |
| ஐ.அ. டொலர் | 313.0513 | 327.9562 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851.1183 |
| குவைட் | குவைட் தினார் | 1,047.3625 |
| ஓமான் | ஓமான் றியால் | 833.5534 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.1004 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.5714 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.3819 |

# ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய கலீபாவுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு மே 14 இல்

**(பேருவளை செய்தியாளர்)**

ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய கலீபதுல் குலபா உஸ்தாத் மௌலவி முஹம்மத் ஸுஹூர் ஆலிம் (பாரி) மற்றும் ஷாதுலிய்யா தரீக்காவின் குலபா ரயீஸுல் முகத்தமீன்கள்,ரூபவ் முகத்தமீன்கள், ரூபவ் ஆகியோர்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இலங்கையின் ஷாதுலிய்யா தரீக்கா தலைமை பீடமான கொழும்பு உம்மு ஸாவியாவில் அதன் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் தலைமையில் நடைபெறும்.

ஷாதுலிய்யா உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபா மற்றும் ரயீஸுல் முகத்தமீன்கள் ரூபவ் மற்றும் முகத்தமீன்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவாக இருந்த மர்ஹூம் அப்துல் ஹமீத் (பஹ்ஜி) அவர்களின் மறைவுக்குப் பின்னர் புதிய கலீபதுல் குலபாவாக மௌலவி முஹம்மத் ஸுஹூர் ஆலிம் (பாரி) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வைபவத்தில் கொழும்பு உம்முஸாவியா நிர்வாக சபை உறுப்பினர்கள், ரூபவ் கலீபாக்கள்,ரூபவ் உலமாக்கள், ரூபவ் ஷாதுலிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்வர்.

# ஆரையம்பதியில் ஒருவர் நீரில் மூழ்கி மரணம்

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பகுதியில் ஆற்றில் மூழ்கி ஆண் ஒருவர் புதன்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

62 வயதுடைய ஐந்து பெண் பிள்ளைகளின் தந்தையான பூபாலப்பிள்ளை யோகநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த நபர் செவ்வாய்க்கிழமை(02) இரவு தனியாக மீன்பிடி நடவடிக்கைகளுக்காக ஆற்றுக்குச் சென்று வலையினை இட்டு விட்டு மீண்டும் அந்த வலையினை எடுப்பதற்காக அதிகாலை சென்றுள்ளார்.

இந்நிலையில், அவர் வலையினை எடுத்துக் கொண்டிருக்கும்போது வலிப்பு நோய் ஏற்பட்டு ஆற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளார். இறந்தவருக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருந்ததாகவும் இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் இவ்வாறு வலிப்பு ஏற்பட்டு இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தினை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பணிப்புரை விடுத்தார். இதனையடுத்து, சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு, மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



அம்பாறையில் செவ்வாய்க்கிழமை(02) மாலை பெய்த கனத்த மழை காரணமாக நகரின் மணிக்கூட்டுக்கோபுரத்தை அண்டிய பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைக் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



அதிகரித்துவரும் வீதி விபத்துகளை தடுக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட விஜயபுர மகா வித்தியாலய மாணவர்களுக்கு வீதி விபத்துகள் மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கமளிக்கும் விசேட செயலமர்வு பாடசாலை அதிபர் திருமதி தேவிக்கா தலைமையில் செவ்வாய்க்கிழமை(02) நடைபெற்றது. பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜி.துஷார திலங்க ஜெயலால், வீதி ஒழுங்குகள் மற்றும் பொதுச் சட்டங்களை கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கமளித்தார். (பெரியநீலாவணை செய்தியாளர்)

# நிதி முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

UNDP அனுசரணையில் அமுல்படுத்தப்படும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் திறன் விருத்தி செயற்திட்ட (CDLG) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 6 மாதகால நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(02) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

APFA ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவர் வி.கணகசபாவதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

மேலும், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்னாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, பிரதி பிரதம செயலாளர்களான (நிர்வாகம்) ஆ.மன்சூர், ஆளணி மற்றும் பயிற்சி திருமதி ஆர்.யூ.அப்துல் ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துபண்டா, சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், கிராமிய கைத்தொழில் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி யூ.கவிதா உள்ளிட்ட மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான 6 மாதகால டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதற்கமைவாக, அதில் தெரிவு செய்யப்பட்டவர்களில் 56 பேர் குறித்த பயிற்சி நெறியை முழுமையாக நிறைவு செய்திருந்தனர். அவர்களுக்கான சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன.

குறிப்பாக, உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியில் அதி சிறப்பு தேர்ச்சிபெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று மாநகர சபையின் செயலாளர் ஏ.எம்.ஹபீபுர் ரஹ்மான் மற்றும் க.கருணாகரன் ஆகியோருக்கு பிரதம அதிதியினால் பாராட்டப்பட்டு அவர்களுக்கான நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலயத்தில் பொருளாதார உதவி தேவைப்படும் பாடசாலை மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் உதவியுடன் கற்றல் உபகரணங்கள் இரண்டாம் தொகுதி வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(02) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச்.பௌஸ், எம்.எச்.றியாசா, கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலீக், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான யூ.எல்.எம். சாஜீத், ஏ.அஸ்மா மலிக், ஏ.சஞ்சீவன் மற்றும் ஏ.எல்.எம்.ஜஹாங்கீர் ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸீக் (முறைசாராக் கல்வி), அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மூலம் அண்மையில் நடத்தப்பட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டியில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவி எம்.ஐ.எப்.இப்பத் முதல்நிலை பெற்று தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளார். இம்மாணவியினைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் புதன்கிழமை(03) இடம்பெற்றது. இதன்போது பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், இணைப்பாட விதானத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீல், மாணவியினை வழிப்படுத்திய விஞ்ஞானப் பாட இணைப்பாளர் ஏ.எல்.நவாஸ் உள்ளிட்ட விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோர் பாராட்டப்பட்டனர். (அட்டாளைச்சேனை செய்தியாளர்)



வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை தரம் 6இல் கல்வி கற்க சேர்ந்துள்ள புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு புதன்கிழமை (03) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சஹாப்தீன், வை.அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.அன்வர், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)

# ரோயல் பாடசாலையின் வித்தியாரம்ப விழா



(மாளிகைக்காடு, நாவிதன்வெளி செய்தியாளர்கள்)

கல்முனை கிரீன் பீல்ட் கமு/கமு/ ரோயல் பாடசாலையில் தரம் 1க்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா புதன்கிழமை(03) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எச்.எம்.அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.எம். றஸ்மி பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ், அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.ஏ.அஸீஸ், இலங்கை வங்கி ஓய்வுபெற்ற முகாமையாளர் ஏ.எச்.ஏ.சமட் உட்பட பாடசாலை நிறைவேற்று அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



காத்தான்குடி மத்திய கல்லூரியில் 2023ஆம் கல்வியாண்டில் தரம் 06இற்கு அனுமதி பெற்ற மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் ஏனைய அதிதிகளாக காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன் ஆகியோருடன் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (காத்தான்குடி செய்தியாளர்)



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2023ஆம் கல்வி ஆண்டுக்காக தரம் 06ஆம் பிரிவில் புதிதாக இணைந்து கொண்ட மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(02) இடம்பெற்றது. தரம் 06க்குப் பொறுப்பான பகுதித்தலைவி ஏ.பீ.றோஷன் டிப்றாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்லூரி முதல்வர் யூ.எல்.எம்.அமீன் கலந்துகொண்டிருந்தார். கல்லூரி ஆசிரிய சங்கத் தலைவர் அலியார் றிபான் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதுடன் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம்.மசூது லெவ்வை, ஏ.எச்.நதீரா, உதவி அதிபர்களான எம்.எஸ்.மனுனா, என்.டி.நதீகா உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



கல்முனை வடக்கு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ஊடகவியலாளரும் வங்கியாளருமான இராசையா ஸ்ரீவேல்ராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய இயக்குனர் சபை தெரிவு அண்மையில்(29) இடம்பெற்றது. இதன்போதே இவர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதன் உப தலைவராக இராஜகோபால் நடராஜா தெரிவு செய்யப்பட்டதுடன் இயக்குனர் சபை உறுப்பினர்களாக முன்னாள் தலைவர் சுப்பிரமணியம் அரசரெத்தினம், மார்க்கண்டு லோகராஜா, கிருஷ்ணபிள்ளை நாகராஜா, அன்புமணி ராஜினி, நிபோஜனா பத்மராஜா, தவராஜா வினிதா, குணரெட்னம் கேதீஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (பாறுக் ஷிஹான், மருதமுனை செய்தியாளர்)

# ஏரிஎம் இயந்திரம் பொருத்தக்கோரி தோப்பூரில் கையெழுத்து வேட்டை



(மூதூர் செய்தியாளர்)

தோப்பூர் இலங்கை வங்கிக் கிளையில் ஏரிஎம் இயந்திரம் பொருத்தித்தருமாறு கோருவதற்காக 5000 கையெழுத்துகளைப் பெறும் கையெழுத்து வேட்டை புதன்கிழமை (03) இடம்பெற்றது.

தோப்பூர் வர்த்தக சங்கம் நடத்திய இக்கையெழுத்துப் போராட்டத்தில் தோப்பூர் பகுதியைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தேப்பூரிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் ஏரிஎம் இயந்திரம் கிடையாது. ஏரிஎம் இயந்திரத்தில் பணம் பெறுவதற்கு பிரதேச மக்கள் சுமார் 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மூதூர் நகருக்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டியுள்ளது.

இந்நிலையில் தோப்பூரில் ஏரிஎம் இயந்திரத்தை பொருத்தித்தரக்கோரி மூன்று நாட்களுக்கு பொதுமக்களின் கையெழுத்து வேட்டை இடம்பெறவுள்ளது. இவ்வாறு பெறப்படுகின்ற கையெழுத்துகளின் பிரதிகள் தோப்பூர் இலங்கை வங்கிக்கிளை, திருகோணமலை பிராந்திய காரியாலயம், கொழும்பு தலைமைக் காரியாலயம் என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

# இரு கஜமுத்துகளுடன் சந்தேக நபர்கள் கைது



(பாறுக் ஷிஹான்)

இரு கஜமுத்துகளை கடத்திச் சென்ற இரு சந்தேகநபர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து பொத்துவில் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்-ஹலாம் வீதி பகுதியில் செவ்வாய்க்கிழமை(02) மாலை முன்னெடுக்கப்பட்ட விசேடசோதனை நடவடிக்கையின்போதே விசேட அதிரடிப் படையினர் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இச்சோதனை நடவடிக்கையின்போது கல்முனை விசேட அதிரடிப்படைக்கு உதவியாக அறுகம்பை முகாம் விசேட அதிரடிப்படையினரும் களமிறங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது, இரு கஜமுத்துகளை கடத்திவந்த 60 மற்றும் 37 வயதுகளையுடைய இரு சந்தேக நபர்களை மாறுவேடத்தில் சென்ற விசேட அதிரடிப்படை அணியினர் கைது செய்ததுடன் கஜமுத்துகள் மற்றும் இதர சான்றுப்பொருட்கள் என்பவற்றை கைப்பற்றி பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய, அம்பாறை வலயக்கட்டளை பதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி.நெத்தசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய, அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி. வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம். டயஸ் தலைமையிலான அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலையில் மாபெரும் தொழிற்கல்வி சந்தை

(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா, கந்தளாய் செய்தியாளர்கள்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலைவாய்ப்புப் பிரிவு, திறன் மற்றும் தொழிற்கல்வி பிரிவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தையானது எதிர்வரும் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம கலந்து கொள்ளவுள்ளார். இங்கு உள்ளூர், வெளியூர் தொழில்தருநர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், உயர்க்கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் 50இற்கும் மேற்பட்ட அரச, தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளன.இம்மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தையானது இளைஞர், யுவதிகள், தொழில் தேடுபவர்கள், தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பான தகவலை பெற விரும்புபவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடை விலகியோர் என அனைவரும் பயன் பெறும் வகையில் நடைபெறவுள்ளது.

# மு.காவின் நம்பிக்கைக்குரியவராக திகழ்ந்தவர் மர்ஹூம் சல்மான்

## ஹரீஸ் எம்.பியின் அனுதாபச் செய்தியில் தெரிவிப்பு

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக மிளிர்ந்தவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.எச்.எம்.சல்மான் என பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.எச்.எம்.சல்மானின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தரும் பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பின் நம்பிக்கைக்குரியவருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மானின் திடீர் மறைவு மிகவும் கவலையளிக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த அன்னார் தனது பதவியை கொண்டு சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பியதுடன் தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார். புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவராகவும் துறைமுகங்கள் அதிகாரசபை பிரதித்தலைவராகவும் இவர் பதவிவகித்த காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றி கொடுத்திருந்தமையை இங்கு நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். முஸ்லிம்களின் இனப்பிரச்சினை விவகாரங்களிலும் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளிலும் உயரிய பங்களிப்பை செய்திருந்தார். அன்னாரின் இழப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் இழப்பாகும். எம்.எச்.எம்.சல்மான் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியேயும் எனக்கு நல்ல பல ஆலோசனைகளை கூறிய விடயங்களை இப்பொழுதில் எண்ணிப்பார்க்கிறேன். சிறந்த குணவியல்புகளைக் கொண்ட அன்னார் பழகுவதற்கு இனிமையான ஒருவர். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர், நண்பர்கள் சகலரினதும் துக்கத்தில் நானும் நேரடியாக பங்குகொண்டவனாக அன்னாரின் நல்லமல்களை இறைவன் பொருந்திக்கொண்டு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சுவர்க்கம் வழங்கிட இறைவனை பிரார்த்திக்கிறேன்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இதய சுத்தியுடன் பேசவேண்டும்

## கருணாகரம் எம்.பி. சுட்டிக்காட்டு



(கல்லடி, வெல்லாவெளி செய்தியாளர்கள்)

நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்வதற்காக தமிழ்த் தரப்புகளை தொடர்ந்தும் ஏமாற்றாது, நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையே பொருளாதாரப் பிரச்சினைக்கு அடிப்படைக்காரணம் என்பதை சிங்களப் பேரின வாதக் கட்சிகளுக்கும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எடுத்துக்கூறி அவர்களையும் இணைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும் தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்குப் பின்நிற்க மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதில் தமிழ்த் தரப்பு பின்னடிப்பதாக ஜனாதிபதி தனது மே தின உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் ஊடக சந்திப்பு செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மே தின உரையில் இந்த வருட இறுதிக்குள் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு தான் உத்தேசித்துள்ளமை பற்றிய கருத்தை வெளியிட்டிருந்தார். இதேபோன்று தான் கடந்த ஆண்டு இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்பதாக இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதாகக் கூறியிருந்தார்.

மேலும், இந்த ஆண்டுக்குள்ளே இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தமிழ்த் தரப்புகள், குறிப்பாக தமிழ்க் கட்சிகள் இந்தத் தீர்வு காணும் விடயத்தைப் பின்னடிப்பதாகவும் கூறியிருக்கிறார். இவர் சில விடயங்களை அறியாமல் இருந்திருக்க மாட்டார் என நினைக்கின்றேன். போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து ஒருபுறம் ஆயுதப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும், இலங்கையிலே மாறி மாறி ஆட்சிசெய்த அரசதரப்புடன் தமிழ்த் தரப்பினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தார்கள்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கூட மஹிந்த ராஜபக்ஷவுடன் 18 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அதேபோன்று அதற்குப் பின்னர் வந்த அரசுகளுடன் குறிப்பாக நல்லாட்சி என்று கூறப்படுகின்ற மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ஜனாதிபதியையும் விட அதிகாரம் கொண்டவராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த அரசாங்கத்திலே பாராளுமன்றத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சபையாகக் கூட மாற்றி பல கூட்டங்களை நடத்தியும் இறுதியில் அது ஏமாற்றப்பட்டதாகவே அமைந்தது.

மீண்டும் தற்போது அனைத்து தமிழ்க் கட்சிகளும் பாராளுமன்றத்தில் தன்னுடன் இணைந்து ஒரு தீர்வைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்று கூறுகின்ற ஜனாதிபதி, முதலாவதாக இந்தப் பொருளாதார நிலைமை இவ்வாறு மாறியதற்கு நாட்டின் இனப்பிரச்சினையே அடிப்படைக் காரணம் என்பதை சிங்களக் கட்சிகளுக்கும் பேரினவாதக் கட்சிகளுக்கும் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எடுத்துக்கூறி அவர்களை தங்களுடன் இணைத்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

அந்தத் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும் தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்குப் பின்நிற்கமாட்டோம் என்பதை உறுதியாகத் தெரியப்படுத்துகின்றோம்.

அதனைவிடுத்து, தற்போதைய பொருளாதார நிலைமையை சீர்செய்வதற்காக மீண்டும் மீண்டும் தமிழ்த் தரப்புகளை ஏமாற்றி அரசில் இணைய வைத்து மக்களை ஏமாற்றாமல் உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை முன்வைத்துவிட்டு எங்களுடன் பேச வாருங்கள். நாங்கள் உங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவது மாத்திரமல்லாமல் இந்த அரசுகளின் அட்டூழியங்களை, அநியாயங்களை, துன்புறுத்தல்களைத் தாங்க முடியாமல் புலம்பெயர்ந்து வாழும் எங்களுடைய உறவுகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கூட நிலைநிறுத்துவதற்கு உதவ முன்வருவார்கள் என்பதையும் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம் என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சமூக நீதிக் கட்சியின் முதலாவது பேராளர் மாநாடு கொழும்பில்

(மருதமுனை மேலதிக செய்தியாளர்)

சமூக நீதிக் கட்சியின் முதலாவது பேராளர் மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

கட்சி ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருட காலத்துக்குள் பலமான அடித்தளத்தின் மீது கட்சி ஒழுங்கமைக்கப்பட்டு, தனது பேராளர் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இப்பேராளர் மாநாட்டின் முதலாவது அமர்வு அரசியல் அமர்வாகவும் இரண்டாவது அமர்வு கட்சியின் உள்ளக அமர்வாகவும் இடம்பெறவுள்ளன.

முதலாவது அமர்வில் அரசியல் பிரமுகர்கள், கட்சிகளின் பிரதிநிதிகள், துறைசார் அறிஞர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாவது அமர்வு கட்சியின் அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்ட அமர்வாக அமையும்.

அந்த வகையில் சமூக நீதி கட்சியில் இணைந்து செயற்பட விரும்புபவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும். அவ்வாறு இணைந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ருடானி ஸாஹிர் (0752863047) தொடர்பு கொள்ளலாம்.




# கல்முனையன்ஸ் போரத்தினால் உணவுப்பொதிகள் விநியோகம்

kalmunaians Forum

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

புனித நோன்பை முன்னிட்டு இம்முறை கல்முனையன்ஸ் போரத்தின் ஏற்பாட்டில் 3,407 ஸஹர் உணவுப்பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியிருந்தவர்களுக்கும் மற்றும் தூரப்பிரதேசங்களிலிருந்து கல்முனைக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தவர்களுக்குமான இலவச ஸஹர் உணவு விநியோகிக்கும் செயற்றிட்டத்தை இவ்வருடமும் கல்முனையன்ஸ் போரம் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

தூர இடங்களிலிருந்து கல்முனை பிராந்தியத்துக்கு பல்வேறுபட்ட தேவைகளுக்காக வருகை தருபவர்கள் புனித நோன்பை நோற்பதற்கான ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவது கல்முனையன்ஸ் போரத்தின் கவனத்துக்குகொண்டு வரப்பட்டதையடுத்து, இச்செயற்றிட்டம் கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ந்து தங்குதடையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் மூலம் இந்த ரமழான் முழுவதும் மொத்தமாக 3, 407 ஸஹர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு 1, 448 ஸஹர் உணவுப்பொதிகளும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு 148 ஸஹர் உணவுப்பொதிகளும் சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு 145 ஸஹர் உணவுப்பொதிகளும் மெடிலேண்ட் தனியார் வைத்தியசாலைக்கு 25 ஸஹர் உணவுப்பொதிகளும் டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த தனியார் வைத்தியசாலைக்கு 216 ஸஹர் உணவுப்பொதிகளும் அஹமட் அலி தனியார் வைத்தியசாலைக்கு 218 ஸஹர் உணவுப்பொதிகளும் கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 34 உணவுப்பொதிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கல்முனை பொலிஸ் நிலையம் மற்றும் பாதுகாப்புப் படையினரின் முகாம்களுக்கு 237 உணவுப்பொதிகளும் பள்ளிவாசல்கள் முஅத்தின்மார்களுக்கு 146 ஸஹர் உணவுப்பொதிகளும் மருதமுனை ஹியூமன் லிங்க் பாடசாலை மாணவர்களுக்கு 87 ஸஹர் உணவுப்பொதிகளும் வெளியூர்களிலிருந்து இங்கு தங்கி கல்விகற்கின்ற மாணவர்களுக்கு 202 ஸஹர் உணவுப்பொதிகளும் ஏனைய நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஊழியர்கள் என மொத்தமாக 3407ஸஹர் உணவுப்பொதிகள் இம்முறை விநியோகிக்கப்பட்டதாக போரத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான முபாரிஸ் எம்.ஹனீபா தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



இந்தவருடம் இறுதிக்குள இனப்பிரச்சனைக்கு தீர்வாம் எண்டு ஜனாதிபதி நரில் சொல்லி இருக்காரு எலுவா..? போன சுதந்திர தினத்துக்கு முன்னம் தீர்வு தருவதாக கூறிய இவர் இப்ப வாற டிசம்பருக்கு முந்தி கிடைக்கும் எண்டு ஆர பேய்க்காட்டுறாரு. இந்த நரி நல்லாட்சி காலத்தில சம்மந்தர ஏமாற்றி அரசியல் தீர்வு தருவதாக நம்பிக்கையை ஊட்டி கழுத்தறுத்த படுபாவி இப்ப அடுத்த கத சொல்லி ஏமாற்றப்போராரு.. எண்டது ஐஞ்சாம் வகுப்பு புள்ளைகளுக்கும் விளங்கும்!

# ஏறாவூர் புத்தகக் கொண்டாட்டம் 2023




ஏறாவூர் வாசிப்பு வட்டமும் ஏறாவூர் நகரசபையும் இணைந்து நடத்தும் ஏறாவூர் புத்தகக் கொண்டாட்டம் நாளை வெள்ளிக்கிழமை 05ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை ஏறாவூர் வாவிக்கரையோரம் அமைந்துள்ள டாக்டர் அஹமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தகங்கள் விற்பனை, கண்காட்சி என்பதையும் தாண்டி பல்லின சமூகங்களின் கலாசார நிகழ்வுகளும் இதன்போது இடம்பெறவுள்ளன. தமிழ், முஸ்லிம், சிங்கள பாரம்பரிய கலைகள், புத்தக வெளியீடுகள், ஆய்வுக் கருத்தரங்குகள், திரையிடுதல், உரையாடல்கள், சிறுவர்களுக்கான தனி அரங்குகள், சமகால தமிழ், சிங்கள இலக்கியங்கள், சிங்கள சினிமாக்கள், சமூகங்களுக்கிடையிலான ஆரோக்கியமான உரையாடல்கள், வாசிப்பை மேம்படுத்தும் வகையிலான மாணவர்களுக்கான நிகழ்வுகள், பட்டிமன்றம், நாடகம், பாடல்கள், பல்கலைக்கழகங்களின் நிகழ்வுகள், பெண்கள் சார்ந்த நிகழ்வுகள், ஓவியம், புகைப்படக் கண்காட்சி, மலையக இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் எனப் பலவகையான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புத்தக அரங்கு மற்றும் நிகழ்வுகள் தொடர்பாக மேலதிக தகவல்களை ஷாஹிருல் இர்ஷாத் - 076 607 8063, ஸப்ரி – 074 003 4890 ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்

## தீவிரமடையும் உள்நாட்டுப் போர்

# ஏழு நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்தது சூடான் இராணுவம்

- ஒரு இலட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம்
- உள்நாட்டுக்குள்ளேயே 3 இலட்சம் பேர் இடம்பெயர்வு



சூடானில் கடும் மோதலில் ஈடுபட்டிருக்கும் அந்நாட்டு இராணுவமும் துணை இராணுவமும் ஏழு நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளன.

உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டுள்ள சூடானிலிருந்து ஒரு இலட்சம் ஏழை மக்கள் பசி, பட்டினியுடன் போராடியபடி அண்டை நாடுகளுக்குள் அகதிகளாக புகுந்துள்ளனர்.

சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவத்துக்கும் ஏற்பட்ட அதிகாரப்போட்டி உள்நாட்டு போராக வெடித்துள்ளது. கடந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகிய மோதலில் இதுவரை 500இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 4,500இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். எங்கு பார்த்தாலும் துப்பாக்கிச் சத்தம் கேட்கும் சூடானிலிருந்து ஒரு இலட்சம் ஏழை மக்கள் எகிப்து உள்ளிட்ட அண்டை நாடுகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

100 டிக்ரி அளவுக்கு கொளுத்தும் வெயிலில் வசதியுள்ளோர் வாகனங்கள் மற்றும் குதிரைகள் மூலமும் வசதி அற்றவர்கள் கழுதைகள் மூலமும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். பசி, பட்டினியோடு போராடியபடி உயிரை கையில் பிடித்துக்கொண்டு மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். ஏதும் அறியாத குழந்தைகள், முதியவர்கள் சுட்டெரிக்கும் வெயிலை தாங்கியபடி கானகங்கள் வழியாக போகும் அவலநிலை காண்போரின் இதயங்களை பிசைவதாக உள்ளது. மறுபுறத்தில் உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் தென் சூடானின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இருதரப்பிலும் சமாதானப் பேச்சுகளுக்காக பிரதிநிதிகளை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அவர்கள் விரும்பும் இடத்தில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை சூடானை விட்டு 73 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஒருவார போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கும் போதும் ஆங்காங்கே தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இப்போர்நிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்படுமா என்பது சந்தேகிக்கப்படுகிறது.

# பிரபல தென்னிந்திய திரைப்பட இயக்குநர் மனோபாலா காலமானார்



பிரபல திரைப்பட இயக்குநரும் நகைச்சுவை நடிகருமான மனோபாலா உடல்நலக் குறைவால் நேற்று(03) தனது 69ஆவது வயதில் காலமானார். அவரது மறைவு திரைதுறையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டு கடந்த 15 நாட்களாக சிகிச்சைபெற்று வந்த மனோபாலா, சென்னையிலுள்ள அவரது வீட்டில் நேற்று (03) காலை உயிரிழந்தார்.

இந்நிலையில், மறைந்த மனோபாலாவின் உடல் இன்று (04) காலை 10 மணிக்கு சென்னை வளசரவாக்கம் மின் மயானத்தில் தகனம் செய்யப்படும் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மனோபாலாவின் மறைவுக்கு திரைத்துறையினர், அரசியல் தலைவர்கள், ரசிகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ரஜினிகாந்த் இரங்கல்:**

''அருமை நண்பர் மனோபாலாவுடைய இறப்பு எனக்கு மிகவும் வேதனையளிக்கிறது. அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்'' என தெரிவித்துள்ளார்.

**இயக்குநர் டி.ராஜேந்தர்:**

''இயக்குநரும் நடிகருமான மனங்கவர் மனோபாலா மறைந்து விட்டார் என்ற செய்தி என் மனதை வருத்தியது. அவரை இழந்து வாடும் அவர்களின் இல்லத்தாருக்கு என் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**இயக்குநர் பாரதிராஜா:**

"என் மாணவன் மனோபாலா மறைவு எனக்கும் எங்கள் தமிழ்த்திரை உலகுக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர், ஓவியர் என பல்வேறு பரிமாணங்களில் பயணித்தவர் மனோபாலா.

தஞ்சை மாவட்டம், மருங்கூர் என்ற ஊரில் 1953ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி பிறந்த மனோபாலாவின் நிஜப்பெயர் பாலசந்தர்.

ஓவியம் சார்ந்த படிப்பை முடித்த அவர் சிறந்த ஓவியர். இயக்குநர் பாரதிராஜாவின் திரைப்பட்டறையிலிருந்து பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக, பின்னாளில் வெள்ளித்திரையில் ஜொலித்த இயக்குநர்களான கே. பாக்யராஜ், மணிவண்ணன், கே. ரங்கராஜ், மனோஜ் குமார் ஆகியோரின் வரிசையில் மிக முக்கியமான இயக்குநராக அறியப்படுபவர் மனோபாலா.

பாடசாலைக் காலத்திலேயே திரைத்துறைதான் தனக்கான துறை என தீர்மானித்து, சென்னைக்குச் சென்று பல போராட்டங்களுக்குப் பின்னர் நடிகர் கமல்ஹாசனின் சிபாரிசின் பேரில் பாரதிராஜாவின் அறிமுகம் கிடைத்து, அவரிடம் உதவி இயக்குநராக பணியமர்த்தப்பட்டார். பாரதிராஜாவின் 'புதிய வார்ப்புகள்' திரைப்படத்தின் மூலம் உதவி இயக்குநராக தனது திரைப்படப்பயணத்தை ஆரம்பித்த இவர், பாலசந்தர் என்ற தனது இயற்பெயரையும் மனோபாலா என மாற்றி அமைத்துக் கொண்டார்.

'நிறம் மாறாத பூக்கள்', 'கல்லுக்குள் ஈரம்', 'நிழல்கள்', 'அலைகள் ஓய்வதில்லை', 'டிக் டிக் டிக்' என பாரதிராஜாவின் பல படங்களில் உதவி இயக்குநராக பணிபுரிந்து அனுபவம் பெற்றார். 1982இல் கார்த்திக் மற்றும் சுஹாசினி நடிப்பில் வெளிவந்த 'ஆகாய கங்கை' என்ற திரைப்படத்தின் மூலம் முதன் முதலாக ஒரு இயக்குநராக தமிழ் திரையுலகுக்கு அறிமுகமானார்.

முதல் படம் தோல்விப் படமாக போக, 1985ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு வெளியீடாக, நடிகர் மோகன் மற்றும் ராதிகா நடிப்பில், கதாசிரியர் பி. கலைமணி தயாரித்த "பிள்ளை நிலா" திரைப்படம் மனோபாலாவுக்கு ஒரு திருப்புமுனையைத் தந்த திரைப்படமாக அமைந்தது.

தொடர்ந்து விஜயகாந்தை நாயகனாக வைத்து சிறைப்பறவை, என் புருஷன்தான் எனக்கு மட்டும்தான், மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும், நடிகர் ரஜினிகாந்த் நாயகனாக நடித்த ஊர்க்காவலன், சத்யராஜ் நடிப்பில் மல்லு வேட்டி மைனர் என 80களின் முன்னணி நாயகர்களை இயக்கி வெற்றி கண்டதோடு, குடும்பக் கதை, காதல் கதை, க்ரைம் த்ரில்லர் கதை என வித விதமான கதைக்களங்களில் பயணித்து வெற்றி கண்டார்.

**நடிப்பிலும் முத்திரை**

பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்தபோதே புதிய வார்ப்புகள், மணிவண்ணனின் கோபுரங்கள் சாய்வதில்லை போன்ற ஒரு சில படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்து தன்னை ஒரு நடிகராகவும் அடையாளப்படுத்திக் கொண்ட மனோபாலாவை ஒரு முழுநேர நடிகராக மாற்றியவர் இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார். 1998இல் கே.எஸ். ரவிகுமார் இயக்கத்தில் வெளிவந்த 'நட்புக்காக' திரைப்படத்தில் 'மதுரை" என்ற கதாபாத்திரத்தில் நடித்தார் மனோபாலா. அதன்பின் இப்போதைய இளம் நடிகர்கள் வரை 200இற்கும் மேற்பட்ட படங்களில் காமெடி மற்றும் குணச்சித்ர வேடங்களில் நடித்து அசத்தினார்.

கடைசியாக இவர் இயக்கிய திரைப்படம் 2002இல் நடிகர் ஜெயராம் நடித்து வெளிவந்த நைனா என்ற திரைப்படமாகும். 2014ஆம் ஆண்டு தனது மனோபாலாஸ் பிக்சர் ஹவுஸ்' என்ற தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் 'சதுரங்க வேட்டை' என்ற திரைப்படத்தை தயாரித்து ஒரு தயாரிப்பாளராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். தொடர்ந்து பாம்புச் சட்டை, "சதுரங்க வேட்டை - 2" ஆகிய படங்களும் இவர் தயாரித்த திரைப்படங்களே.

'அல்லி ராஜ்ஜியம்', 'மாயா', 'செம்பருத்தி', 'ராஜபார்வை' போன்ற தொலைக்காட்சித் தொடர்களில் நடித்ததன் மூலம், சின்னத்திரை நடிகராகவும் அறியப்பட்டார்.

சென்னை, சாலிகிராமத்தில் மனைவி உஷா மற்றும் மகன் ஹரிஷுடன் வசித்து வந்தார்.

ஓவியர், திரைப்பட இயக்குநர், கதாசிரியர், நடிகர், தயாரிப்பாளர் என பன்முகத் தன்மை கொண்ட இந்த திரைக் கலைஞர், தனது நீண்ட நெடிய கலைப்பயணத்தில் தமிழ், கன்னடம், ஹிந்தி மொழிகளில் 40 திரைப்படங்கள் வரை இயக்கியும் 3 திரைப்படங்கள் தயாரித்தும் 200இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்தும் உள்ளார். ஹொலிவுட் படமான தி லயன் கிங் தமிழ் பதிப்புக்கு டப்பிங் குரலும் கொடுத்தார்.

விஜய்யின் நடிப்பில் உருவாகி வரும் லியோ திரைப்படத்தில் கடைசியாக நடித்து வந்தார் மனேபாலா.பன்முக படைப்பாளியான மனோபாலாவின் மறைவு நிச்சயம் திரையுலகிற்கு பேரிழப்பே.



மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்டும் நோக்கில் மகளிருக்கான மோத்தாய் குத்துச்சண்டை போட்டி நிகழ்ச்சி ஒன்று கொழும்பு ரோயல் மாஸ் எரீனாவில் அண்மையில் இடம்பெற்றது. பல பகுதிகளையும் சேர்ந்த எட்டு போட்டியாளர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் மாவனல்லையைச் சேர்ந்த மரியம் முர்த்தஸா வெற்றியீட்டினார். (படம் - பாரா தாஹீர்)

# மெஸ்ஸியை இடை நீக்கியது பி.எஸ்.ஜி



சவூதி அரேபியாவுக்கு இரண்டு நாட்கள் அங்கீகரிக்கப்படாத பயணத்துக்குப் பிறகு லியோனல் மெஸ்ஸியை பாரிஸ்-செயின்ட் ஜெர்மைன் இடைநீக்கம் செய்ததாக பிரெஞ்சு விளையாட்டு நாளிதழான ' p செவ்வாயன்று தெரிவித்துள்ளது. ஆர்ஜென்ரீனா உலகக் கோப்பையை வென்ற கப்டன் இரண்டு வாரங்கள் இடைநிறுத்தப்படுவார் என பிரான்ஸில் உள்ள பல்வேறு ஊடகங்கள் கூறியுள்ளன.

அணியுடன் விளையாடவோ அல்லது பயிற்சி பெறவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது இடைநீக்கத்தின் போது அவரது ஊதியம் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ட்ராய்ஸ் மற்றும் அஜாசியோவுக்கு எதிரான வரவிருக்கும் லீக் 1 போட்டிகளை மெஸ்ஸி தவறவிடுவார். ஆனால் மே 21 அன்று ஆக்ஸெருக்கு எதிரான போட்டிக்கு திரும்பலாம். பி.எஸ்.ஜி. 33 போட்டிகளில் 75 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. மெஸ்ஸி இந்த சீசனில் இதுவரை 14 போட்டிகளில் விளையாடி 15 கோல்கள் அடித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

TATA IPL

## இன்றைய போட்டி

போட்டி இல - 47

ஹைதராபாத் எதிர் கொல்கத்தா

நேரம் - இரவு 7.30

இடம் - ஹைதராபாத்

# ஷமிக்கு பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்பு

## மனைவி ஜஹான் பகீர் குற்றச்சாட்டு



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான முஹமட் ஷமி பல பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்பிலிருந்தார் என அவரது மனைவி ஹாசின் பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

ஷமிக்கு ஹாசின் ஜஹான் என்ற பெண்ணுடன் திருமணம் நடைபெற்ற நிலையில் இருவருக்கும் இடையே நீண்டகாலமாக கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக ஹாசின் ஜஹான் பல்வேறு புகார்களை தெரிவித்து வருகிறார்.

ஷமி வரதட்சனை கேட்டு துன்புறுத்துவதாகவும் குடும்ப தகராறில் தன்னை தாக்கியதாக பாலியல் மற்றும் குடும்ப துஷ்பிரேயாக பிரிவுகளில் புகார் அளித்தார். ஆனால் ஹாசின் ஜஹானின் தொடர் புகார்களுக்கு ஷமி மறுப்புத் தெரிவித்தார்.

இந்நிலையில் விவாகரத்துக் கோரிய வழக்கு கொல்கத்தா குடும்பநல நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. 2018 ஆம் ஆண்டு தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஷமியின் மனைவி ஹாசின் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மனுத் தாக்கல் செய்துள்ளார். அதில் ஷமி மீது பல்வேறு பரபரப்பு புகார்களை அடுக்கியுள்ளார்.

இதில் பல பாலியல் தொழிலாளர்களிடம் கள்ள உறவு வைத்துக்கொண்டிருந்தார். இதற்காக தனியாக ஒரு மொபைல் போன் வைத்துக்கொண்டு பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்பு கொண்டு உறவில் இருந்தார். கிரிக்கெட் விளையாட சக அணி வீரர்களுடன் பயணம் மேற்கொள்ளும் போது கூட இந்த உறவுகளை அவர் தொடர்ந்து மேற்கொண்டார் என ஹாசின் தனது மனுவில் புகார்களாக தெரிவித்துள்ளார்.

# முதலிடத்தில் இந்தியா; இலங்கைக்கு ஏழாமிடம்

ஐ.சி.சியின் புதிய டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் முதலிடத்திலிருந்த ஆஸி. அணியை பின்தள்ளி மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது இந்திய அணி. வருடாந்த தரவரிசை மதிப்பீட்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலிய அணி 122 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்தது. இந்தியா 119 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் இருந்தது.

ஆண்டு தர நிர்ணய மதிப்பீடுகளின் படி மே 2020 முதல் மே 2022 வரை நடைபெற்ற போட்டிகளுக்கு 50 சதவீத புள்ளிகளும் அதற்கு பிறகான போட்டிகளுக்கு 100 சதவீத புள்ளிகளும் வழங்கப்படும். அதன் அடிப்படையில் இதனால் அவுஸ்திரேலிய அணியின் புள்ளிகள் 121-ல் இருந்து 116 ஆக குறைந்துள்ளது.

அதேவேளையில் இந்தியா 2019ல் நியூஸிலாந்து அணியிடம் 2-0 என தோல்வி அடைந்தது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் 2 புள்ளிகள் அதிகமாகி இந்திய 121 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இங்கிலாந்து அணி 114 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் தொடர்கிறது. இலங்கை அணி 84 புள்ளிகளுடன் ஏழாமிடத்தில் காணப்படுகிறது.





கேகாலை ,எட்டியாந்தோட்டை, கராகொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட பாடசாலையின் பழைய மாணவர்களுக்கிடையிலான 22 அணிகள் கலந்துகொண்ட கிரிக்கெட் தொடரில் 2008ஆம் ஆண்டு சாதாரண தர அணியினர் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினர். (படங்கள் - அஹ்மத் அக்ரம்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7